விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 13 செவ்வாய்க்கிழமை (27.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

## தொழுகையில் ஈடுபட்டவர்கள் தாக்கப்பட்டனர்

(குருமன்காடு)

வவுனியா, சூடுவெந்த புலவு பகுதிய வயல் திடலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது மற்றுமொரு முஸ்லிம் குழு 24☛

## தூதுவர்கள் அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான வெளி நாட்டு தூதுவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் 4ஆம் 23☛

## விளக்கு ஏற்றி சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள குரோதத்தனமான அரசியல் நடத்தை காரணமாகவே இயற்கை அனர்த் 24☛

## தபால் சேவையாளர் பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

தபால் சேவையாளர்கள் ஒன்றியம் நேற்று நள்ளிரவு தொடக்கம் மீண்டும் 23☛

# நான் குற்றவாளியெனில் உடன் இருந்தவர்களும் குற்றவாளிகள்தான்

## மகிந்த மனவேதனை



(கொழும்பு)

என்னை இன்று குற்றம் கூறும் நபர்கள் அன்று எனது அமைச்சரவையில் இருந்தவர்கள். என்னால் ஏதேனும் குற்றம் இடம்பெற்றிருப்பின் அதற்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அன்று என்னுடன் இருக்கும் வரையில் என்னை அரசன் என கூறியவர்கள் இன்று என்னை குற்றவாளி என கூறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. குற்றங்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னுடன் இருந்த அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (18ஆம் பக்கம் பார்க்க)

## பிரிவினை இன்றி சகலரும் ஒற்றுமையாக வாழ்வோம்

### அபேதிஸ்ஸ தேரர் யாழில் கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு, தெற்கு என்ற பிரிவினை இன்றி சகலரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென பேராசிரியர் அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் என்ற பெயரில் இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

மக்கள் பிரிந்து நிற்பதையே அரசியல்வாதிகள் பெரிதும் விரும்புகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

சுனேத்திராதேவி பிரிவெனா ரஜமஹா விகாரையைச் சேர்ந்த பௌத்த குருமார்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் போதனாவைத்திய சாலைக்கு விஜயம் செய்துள்ளதுடன் அங்கு இரத்த 23☛

## அரசாங்கத்தின் முடிவை சைட்டம் தீர்மானிக்கும்

### உதய கம்மன்பில எச்சரிக்கை



(கொழும்பு)

தனியார் மருத்துவ கல்லூரியான சைட்டம் நிறுவனம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்வு நாட்டை பானையில் இருந்து அடுப்பில் தள்ளியது போன்றது எனவும் அரசாங்கத்தின் முடிவை தீர்மானிக்கும் விடயங்களில் சைட்டமும் ஒன்று எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கொழும் 24☛

## மனிதநேயம் இல்லாத மருத்துவர்களே அதிகம்

### அமைச்சர் ராஜித விசனம்



(கொழும்பு)

நாட்டில் மனிதநேயம் இல்லாத மருத்துவர்களே அதிகம் இருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன விசனம் தெரிவித்துள்ளார். சைட்டம் பல்கலைக் கழகத்திற்கு எதிராக 24☛

## சம்பந்தன் வழங்கிய வாக்குறுதி இன்றுவரை சாத்தியப்படவில்லை

### 118 ஆவது நாளாக தொடரும் போராட்டம்



23☛

## மதுபானசாலை அனுமதி குறித்து விசாரணை

(கண்டி)

மட்டக்களப்பு, கல்குடா, கும்புறுமூலை வேம்பு பகுதியில் சுமார் 20 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் கட்டப்பட்டு வருகின்ற மதுபான சாலைக்கான அனுமதி தொடர்பான 23☛

## தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள்; அமெரிக்க தூதுவர் அதுல் கரிசனை



(கொழும்பு)

அண்மையில் இலங்கையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தேசிய கிறிஸ்தவ இவாஞ்சலிக்கல் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியுள்ளார். 23☛

## ரூ.80 இலட்சம் பணம் கொள்ளை

(ராகம)

வானொன்றில் எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த சுமார் 80 இலட்சம் ரூபாய் வரையான பணம் கொள்ளையிடப்பட் 23☛

## குப்பை வீசிய 454 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பின் பல நகரங்களில் குப்பைகளை வீசிச் சென்ற 454 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக 23☛

## அதிக குப்பைகளால் உயிரிழப்பு அதிகம்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் இந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு அதிகரித்து வரும் குப்பைகள்தான் 23☛

## நல்லாட்சி அரசாங்கம் உணர்வில்லாதது - விமல்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் ஒரு உணர்வில்லாத அரசாங்கம். அந்த அரசாங்கத்தின் அரசியல் ரீதியிலான உணர்வற்ற செயற்பாடுகள் குறித்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் விமல் 23☛

## 6 பேர் நாடு கடத்தல்

(கொழும்பு)

படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு சென்ற இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆறு பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களே இவ்வாறு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய விசேட 23☛

## மகனைத் தேடிய தாய் வேதனையுடன் மரணம்

(மல்லாவி)

தமிழர் தாயகப் பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தாயொருவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனின் முகத்தை பார்க்காமலே உயிரிழந்த பரிதாப சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது குடியிருப்பில் உள்ள ஆனந்தபுரம் 23☛

## மன்னார் கடற்படுக்கையில் போதியளவு எண்ணெய் வளம்!

### முதலீட்டாளர்களை கண்டறிய முயற்சி

(மன்னார்)

மன்னார் கடற்படுக்கையில், 5 பில்லியன் பரல் எண்ணெயும், 9 ரில்லியன் சதுர அடி இயற்கை எரிவாயுவும் இருப்பதாக, பொது கணக்குக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

பொது கணக்குக் குழுவின் அறிக்கையை அவர் நாடாளுமன்றத்தில் வெளியிட்டபோது இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த எண்ணெய், இயற்கை எரிவாயு 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடிப்படைவாதத்திலிருந்து பெளத்தத்துக்கு பாதுகாப்பு

## பிரதமர் ரணில் வலியுறுத்து

மதத்திற்குள் அடிப்படைவாதம் பரவியதால் ஏற்பட்ட சேதங்களை கண்டிருப்பதாகவும் மேற்குலகில் பெளத்த தர்மம் குறித்து அக்கறை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அடிப்படைவாதத்தில் இருந்து பெளத்த தர்மத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை போதி மரம் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமரபுர பெளத்த பீடத்தின் உபசம்பதா மகோற்சவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சீனா, கொரியா போன்ற மகாயான பெளத்த தர்மம் உளள நாடுகள் மூலமே அமெரிக்க மக்கள் முதலில் பெளத்த தர்மத்தை அறிந்து கொண்டனர்.

நாங்கள் இலங்கையில் ஒல்கோட் பற்றிய விடயங்களை ஆராய்ந்தாலும் இவர்களில் பலர் சீனா, ஜப்பான்,கொரியா, தாய்வான் போன்ற நாடுகளுடன் உறவுகளை வைத்திருந்தனர். இவர்களில் சிலர் வியட்நாம், கம்போடியா நாடுகளுக்கு வந்தனர்.

உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆசிய, தெற்காசிய, தென் கிழக்காசிய நாடுகளில் பெளத்த தர்மம் பற்றிய பாடநெறிகள் உள்ளன.

இதனால், பெளத்த தர்மம் குறித்து மேற்குலக நாடுகளில் உள்ளவர்கள் விசேட அக்கறை காட்டுகின்றனர். இது ஆச்சரியமான விடயம்.

மேற்குலக நாடு களில் தற்போதுள் ளது போன்று முன் னேற்றம் எந்த யுகத்திலும இருக்க வில்லை. தொழில்நுட்பம், தக வல் தொழில் நுட்பம் போன்ற அனைத்திலும் மேற்குலக நாடுகள் முன்னணியில் உள்ளன.

அவர்கள் மன நிலை என்ன என்பது குறித்து அறிய முன்னேற்றமான கருவிகளை கொண்டு ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். தேரவாத பெளத்தம்தொடர்பாக அவர்கள் ஆராயந்து வருகின்றனர்.

இந்த பெளத்த தர்மம் பற்றிய அறிவை பத்திரிகை, சஞ்சிகைகள் மூலம் பெற்று வருகின்றனர். பெளத்த மத போதனைகளில் கலந்து கொண்டு அறிவை பெறுகின்றனர்.

பெளத்த தர்மம் பரவுவதற்கு நாம் இடமளிக்க வேண்டும். தாய்லாந்தே பெளத்தம் பற்றிய அதிகளவான நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளது.

இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது. இந்த நிலைமையை நாம் மேலும் முனேற்ற வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

**விற்பனையாளர் தேவை (ஆண்கள்)**

எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்து முடித்த புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. நேரில் வருகை தரவும். (புழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது) (9587)

**சென்னை பெசன் வேல்ட்** No.63, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# நன்றி கூறுதல்

வீமன்காமம் வடக்கு (மயிலப்பை) சர்வதேச ஒன்றியம் சிறிகாந்தலிங்கம் தலைமையில் வீமன்காம புலம்பெயர்ந்த மக்களின் உதவியோடு இயங்கும் உதவி ஒன்றியம் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து அவலப்பட்ட எமக்கு சில ஆண்டுகளின் பின்னர் மாணவர்கள், பெரியவர்கள் என அவர்களின் தகுதிக்கு ஏற்ப பண உதவி செய்து குடும்ப வளர்ச்சிக்கு உதவியவர்கள் (மயிலப்பை) மக்கள் சிலர் முள்ளிவாய்க்காலில் அகப்பட்டு செட்டிக்குளம் முகாமுக்கு சென்றவுடன் முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் **அருந்தவநாதன்** எங்களுக்கு உரிய பணத்தினை பல சிரமத்தின் மத்தியிலும் கொண்டு வந்து தருவார். அவருக்கும் எமது நன்றி.

இந்த உதவிகளை தமது பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு பெற்றுக் கொடுக்க முன்னின்றவரும் குருந்தடி அம்மன் ஆலய வளர்ச்சிக்கும் கிராம வளர்ச்சிக்கும் முன்னின்ற அமரர் **நாகலிங்கம் நமசிவாயம்** அவர்களின் (சீனி ஐயர்) 1ஆம் ஆண்டு 27.06.2017 இன்று அவரின் நினைவில் நின்று இவ்உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வெங்காயச் சங்கத்தடி,
மயிலப்பை.

அமரர் தம்பையாவின் மகள்
ராசாத்தி பிள்ளைகள் குடும்பம்
077 928 6417

(9583)

# மரண அறிவித்தல்கள்



## துரைச்சாமி சித்திரவேல்

வன்னி விளாங்குளம் மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி சித்திரவேல் நேற்று (26.06.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சறோஜினியின் அன்புக் கணவரும் சிறிதரன் (லண்டன்), அரிதரன் (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (வன்னிவிளாங்குளம், மாங்குளம்), பாலச்சந்திரன் (சுவிஸ்), ரஜினி (ஜேர்மனி), தர்மேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிகாந்தன், கஜந்தா, பிரமிளா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2017) புதன்கிழமை காலை 10 மணிக்கு வன்னிவிளாங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வன்னிவிளாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னிவிளாங்குளம்,
மாங்குளம்.

தகவல்: சி.ரவிச்சந்திரன் குடும்பத்தினர்
077 212 4601

(C-8890)

# மரண அறிவித்தல்



## அமரர் சீனியர் இராசா

(ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்)

மயிலிட்டி மயிலி ஓடையைப் பிறப்பிடமாகவும் வேரவல் இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்தவருமாகிய **சீனியர் இராசா** 24.06.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர், வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து, தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் ( அன்னம் ) அன்புக் கணவரும், இரவீந்திரன் (செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாண்ம்) , ரஜனி (சுன்னாகம்),இராமச்சந்திரன்( பொறியியலாளர் இலண்டன்) , றீஷீந்திரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரோகினி (ஆசிரியர், சைவப் பிரகாச வித்தியாசாலை , வவுனியா) , ஆனந்தகுமார் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை), அருணா( இலண்டன்) , மலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீர்த்தன் (பொறியியலாளர், மாத்தறை) லவகீர்த்தன், பவகீர்த்தன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலய உயர்தர மாணவர்கள்) வேதாகுலன் ( யாழ். இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்), இலாவண்யா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை உயர்தர மாணவி) , அருண்ராம், அபிராம், அபிநயா (இலண்டன்) , அஜீர்த்தனன், சஜீர்த்தனன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை, சின்னத்தம்பி, பார்வதி, லட்சுமி, இராசதுரை, துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பருத்தியோலை வீதி, மயிலணி, சுன்னாகத்தில் அமைந்துள்ள இல்லத்தில் (27.06.2017) இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தியோலை வீதி,
மயிலணி, சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்-077 386 8588

# சின்னக்குட்டி கந்தையா

## (முன்னாள் அதிபர்)



காலையடி தெற்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் கனடாவினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கந்தையா 24.06.2017 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி நன்னிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரமூர்த்தி, தயாளன், ஞானேஸ்வரன், கலாவதி, கலைவாணி, அம்பிகா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவலிங்கம், சூரசங்காரன், பாலசுப்பிரமணியம், இந்திராணி, புஸ்பராணி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2017 நாளை புதன்கிழமை நடைபெற்று அன்றையதினம் கனடாவில் தகனம் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-

காலையடி தெற்கு,
பண்டத்தரிப்பு

மகள்:கலைவாணி சூரசங்காரன்
மகன்:விக்கினேஸ்வரமூர்த்தி

(9582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உடலில் இருப்பது இராணுவத்தினரின் இரத்தமே!

## வடக்கு ஆளுநர் கூரே தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உடலில் இருப்பது பிக்குகள், இராணுவத்தினரின் இரத்தமே எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, தமிழ் மக்கள் நோயுற்றிருக்கும் போது அவர்களின் இரத்தமே முதலில் உதவிக்கு வந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாம் இன, மத, மொழி பேதம் இன்றி தாய் நாட்டுக்காக வாழ்ந்தால் எமது நாட்டை அபிவிருத்தி செய்வதில் எந்த பிரச்சினையும் இருக்காது.

இன, மத, குலத்துக்கு மேல் மனித தன்மையை முன்னிலைப்படுத்த வேண்டும் மனித தன்மை தான் மேலோங்கி இருக்க வேண்டும். தமிழ் மக்கள் நல்ல மனிதர்கள் ஆனால் சில அரசியல் வாதிகளிடத்தில் மனித தன்மை இல்லை.

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் இரத்தம் இல்லை என வைத்தியர் சொன்னார். உடனடியாக நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) கொழும்பில் இருந்த பௌத்த பிக்குமார் யாழ்ப்பாணம் வந்து இரத்ததானம் வழங்கினார்கள்.

இரத்தம் இல்லை என்றவுடன் தமது சகோதர இனத்துக்கு என இராணுவத்தினரும் பிக்குமாரும் தான் இரத்தத்தை வழங்கினார்கள். இப்போது தமிழ் மக்கள் நோயுற்று இருக்கும் போது இராணுவத்தினதும் பிக்குகளினதும் இரத்தம் தான் உதவிக்கு வந்துள்ளது.

இந்தியாவில் இருந்து தான் இலங்கைக்கு மதம் வந்தது. இலங்கை அரசர்களுக்கு மனைவிமாரும் இந்தியாவில் இருந்துதான் வந்தார்கள் இலங்கையில் இரு இனத்தவருடைய இரத்தம் தான் ஒன்றாக கலந்துள்ளது. ஆனால் நாம் சண்டை போடுகிறோம்.

நம் தெய்வங்கள் ஒற்றுமையாக உள்ளனர். ஆனால் தெய்வங்களை வழிபடுகிறவர்கள் முரண்படுகிறார்கள்.

வசதி வாய்ப்புக்களுடன் உள்ள அரசியல்வாதிகள் பலர் இனம், மதம், மொழி பேதம் இன்றி நெருக்கமான உறவுகளை கொண்டுள்ளனர். ஆனால் பாதிக்கப்பட்ட கஷ்டப்பட்ட மக்களை அவர்கள் தொடர்ந்தும் பிரிவினையுடன் வைத்திருக்கிறார்கள்.

எனவே எமது இளம் சமூகத்தினர் எதிர்காலத்தில் சிறப்புடன் வாழ்வதற்கு, இவற்றை அறிந்து நடக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக மேலும் இரண்டு பல்கலை. மாணவர்கள் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில், மேலும் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சியம்பலாண்டுவ மற்றும் கடான பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்களை சியம்பலாண்டுவ மற்றும் மாலிகாகந்தை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இடம் பெற்ற போராட்ட நடவடிக்கையின் போது, சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்ததாக கூறப்படும் மாணவக் குழுக்கள் சிலர் அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட சில மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே மேலும் இரண்டு மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## வானில் சென்றவர்களை மறித்து 80 இலட்சம் ரூபாய் கொள்ளை

வானொன்றில் எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த 80 இலட்சம் ரூபாய் வரையான பணம், கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்றுப் பகல் ராகம - பெசிலிகா வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

காரொன்றில் வந்த கொள்ளையர்கள் வீதியை மறித்து வானின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும், இதனால் எவருக்கும் காயங்களோ உயிராபத்தோ ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அளவு கடந்த பேராசை அழிவை ஏற்படுத்தும்

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு

பௌதீக வளங்களின் மீது மனிதன் கொண்டுள்ள பேராசையானது மக்கள் மத்தியில் பிளவுகளை தோற்றுவித்து, அமைதியின்மையை ஏற்படுத்தி, நம்பிக்கையீனத்தை பரப்பி, அழிவை ஏற்படுத்தும் இருப்புக்கு காரணமாக அமைகின்றதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ரம்ழான் மாதத்தில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்கும் பரஸ்பர கௌரவம், ஈகை, சமத்துவம் என்பன பிறர் நலம் பேணுவதிலேயே மனிதனது விடுதலை தங்கியுள்ளதென்பதை தெளிவாக உணர்த்துகின்றதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் நேற்று திங்கட்கிழமை கொண்டாடப்பட்ட நோன்புப் பெருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பிரபஞ்ச சமத்துவமே நோன்புப் பெருநாளின் மூலம் உலகிற்கு கூறப்படும் செய்தியென தெரிவித்துள்ள ஜனாதிபதி சமய, ஆன்மீக மற்றும் சமூக பெறுமானங்களின் அடிப்படையில் எல்லாவற்றிலும் சமத்துவத்தை பேணுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றதென ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆஸியிலிருந்து 20 அகதிகள் நேற்று திருப்பியனுப்பப்பட்டனர்

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவில் இருந்து 20 அகதிகள் வாடகை விமானம் ஒன்றின் மூலம் நேற்றுக் காலை கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று தி ஒஸ்ரேலியன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் எல்லைக் காவல் திணைக்களத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றில், 20 இலங்கையர்கள் பாதுகாவலர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுடன் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை, அஸி கடற்படையின் இரண்டு படகுகள், சிறிய படகு ஒன்றுக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்ததை கிறிஸ்மஸ் தீவு மக்கள் கண்டிருந்தனர்.

இதனால், இலங்கையில் இருந்து அகதிகள் படகு வந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனினும், குறித்த படகு வேறு ஏதேனும் நடவடிக்கைக்காக மறிக்கப்பட்டதா என்பதை, அவுஸ்திரேலிய குடி ரவு அமைச்சர் பீற்றர் டற்றனின் பேச்சாளர் உறுதிப்படுத்த மறுத்து விட்டார். கடைசியாக கடந்த மார்ச் மாதம், அகதிகள் படகு ஒன்றை அவுஸ்திரேலியா இடைமறித்திருந்தது.

அதில் வந்த 25 அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அவுஸ்திரேலியா அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்கான கோருதல்
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# மீள்குடியேற்ற அமைச்சுக்காக

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு சார்பில் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்திற்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக் கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.
   மீள்குடியேற்ற பிரிவு,
   மாவட்ட செயலகம்
   கண்டி வீதி,
   யாழ்ப்பாணம்.
   **Tel: 021-222 4029 / 021-221 2631**
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 28.06.2017 முதல் 18.07.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 19.07.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாண்ம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 11.07.2017 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல. | வேலை விபரம் | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | கேள்வி செல்லு படியாகும் காலம் (நாட்கள்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப் படும் காலம். |
| JF/RES/HE-CE/VII/05/2017 | யா/சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மூன்று மாடி குணப்படுத்தும் நிலைய கட்டடம் நிர்மாணித்தல் | 5000.00 | 28.2 | 90 | 135 நாட்கள் | C4 அல்லது C5 (கட்டடங்கள்) | 283,000.00 | 23.10.2017 வரை |

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
(C-8892)


# நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை
## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
## சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கல் - 2017

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, நோயாளர் நலன்புரிச் சங்கம் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள புதிய நவீனமயப்படுத்தப்பட்ட சிற்றுண்டிச்சாலையை தகுதியான, தகைமை வாய்ந்த நடத்துநர்களிடமிருந்து 01.08.2017 தொடக்கம் 31.07.2018 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளைக் கோருகின்றது.

| பெறுகை விபரம் | பெறுகை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்விப் பணம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை குத்தகை | PWS/CANTEEN/2017 | ஐம்பதாயிரம் (50, 000) |

01. ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 1, 000/=
02. நிறுவனமயப்படுத்தப்பட்ட, தகுதி வாய்ந்த, அனுபவமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
03. கேள்விப் பணம் மாதவாடகையைக் குறிப்பதாகும். இறுதி மூன்றுமாத வாடகையும் முற்பணமாகச் செலுத்தல் வேண்டும்.
04. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் "Application for Bid documents" என்ற படிவத்தைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட பத்திரப் பணமாகிய ஆயிரத்தை காசாகச் செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 27.06.2017 தொடக்கம் 14.07.2017 வரையான காலப்பகுதியில் காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை பெற்றுப் பூர்த்திசெய்து பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்திலுள்ள பெறுகைகள் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் 14.07.2017 வெள்ளிக் கிழமை பி.ப 3 மணிக்கு விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
05. கிடைக்கப்பட்ட விலைக் கேள்விகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அல்லது முழுமையாக ரத்துச் செய்வதற்கோ யாருக்கு வழங்கவேண்டும் என்று தீர்மானிப்பதற்கோ கேள்விச் சபைக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

லயன் சி.ஹரிகரன்
செயலாளர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.
(C-8893)


(படங்கள் : சோபிகா)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன.

# எதிர்காலம் குறித்து ஓகஸ்ட் மாதம் முடிவு - டி வில்லியர்ஸ்

கிரிக்கெட்டில் தன்னுடைய எதிர்காலம் குறித்து ஓகஸ்ட் மாதம் முடிவு செய்வேன் என்று தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும், ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராகவும் திகழ்ந்து வருபவர் ஏபி டி வில்லியர்ஸ். மைதானத்தின் எந்த திசைக்கும் பந்தை பறக்கவிடும் திறமை படைத்தவராக திகழ்வதால், இவரை 360 டிகிரி என்று அழைக்கிறார்கள்.

மேற்கிந்தியத் தீவுகள் தொடரின்போது இவருக்கு காயம் ஏற்பட்டது. அதன்பின் நீண்ட காலம் கிரிக்கெட் விளையாடாமல் இருந்த டி வில்லியர்ஸ், நியூசிலாந்து தொடரின்போது மீண்டும் களம் இறங்கினார். ஆனால், டி வில்லியர்ஸால் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

ஜூன் 1 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற சம்பியன்ஸ் டிராபி தொடரில் தென்னாபிரிக்கா அணி லீக் சுற்றோடு வெளியேறியது. இதில் டி வில்லியர்ஸ் சிறப்பாக துடுப்பாட்டம் செய்யவில்லை. இந்த தொடருக்குப்பின் மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 லீக் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக விளையாடினார். இதில் ஒரு போட்டியில் மட்டுமே அரைச் சதம் அடித்தார். இந்த தொடரை தென்னாபிரிக்கா 1 - 2 என இழந்தது.

இதனால் அவர் தொடர்ந்து தென்னாபிரிக்கா அணியில் நீடிப்பாரா? என்ற கேள்வி எழும்பியுள்ளது. இதுகுறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில், தனது எதிர்காலம் குறித்து ஓகஸ்ட் மாதம் முடிவு செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 6ஆம் திகதி தொடங்குகிறது. ஓகஸ்ட் 8ஆம் திகதி தொடர் முடிவடைகிறது. இந்த தொடர் முடிந்தபின்னர், தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியத்துடன் டி வில்லியர்ஸ் தன்னுடைய எதிர்காலம் குறித்து பேச இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு-பல்கலை.மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரி க்கை விடுத்துள்ளார். கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகமாணவர்களுடன் விரோதம் பாராட்டாது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் முனைப்புகாட்டவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில்நிலவிவரும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை மூடி மறைக்கும நோக்கில் அரசாங்கம் மாலபே தனியார் மருத்துவக்கல்லூரி குறித்த பிரச்சினையை இழுத்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருநா கல் சென்றிருந்த போது மாடு வளர்ப்போர் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து தம்மிடம்முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் பொலிஸ்மா அதிபரின் ஊரில் அதிகளவு மாடுகள் களவாடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து எவரும் உரிய கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அவர்களின்

பாசமிகு தந்தை

**சீனியர் இராசா**

அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி, கீரிமலை. C-9522 பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


# துரையப்பா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலத்தின் பரிசளிப்பு விழா நாளை 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நடேசு தயாளன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ். வலயக் கல்வி அலு வலக முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் அ. அகில தாஸ் கலந்து கொள்வார். (இ-3)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

**021 222 8117, 077 900 8776**

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



## அன்பு வாசகர்களே!

## உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

**076 636 3378**

Viber



## அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு 1937 - 03 - 28



இறப்பு 2017 - 05 - 29

கடந்த 29.05.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த

அமரர் **சபாரத்தினம் உத்தரகோச மங்கையர்க்கரசி அம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28.06.2017 புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஊறணி அந்தியேட்டி மடத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசீர்வாதம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
0771028837

இங்ஙனம்,
பூ.அகமணிதேவர் (சகோதரன்),
இளைப்பாறிய அஞ்சல் அதிபரும்
சமாதான நீதவானும்

C-8884


# இராசி பலன்

27.06.2017

(ஆனி 13, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.18மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 1.14 மணிவரை
சுபநேரம் 10.25 - 11.55 மணிவரை
இராகுகாலம் 2.55- 4.25 மணிவரை
சதுர்த்தி விரதம்,
உலக நீரிழிவு தினம்

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | சூரி புத செவ் |
| கேது | கிரகநிலை | | சந் |
| | | | ராகு |
| | சனி | | குரு |

சந்திராஷ்டமம்: பூராடம், உத்தராடம் இரவு 1.16 மணிக்கு சிங்-சந்

**மேடம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** கடினமான வேலையைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு, தொழிலில் எதிர்காலத்தில் சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்களின் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை, சயனக் குறைவுகள் ஏற்படலாம், தொழில் விருத்தியுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள்.

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்:** பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் [illegible] களின் [illegible] காட்டு வீர்கள்.


**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மகரம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மாமன் மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மீனம்:** பல நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச புகைத்தல் – போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வேலணை பிரதேச செயலகத்தின் சமுர்த்தி பிரிவினரால் மண்டைதீவு ஜே/7, ஜே/8, ஜே/9 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடக ஆற்றுகை நேற்று முன்தினம் இடம் பெற்றது.

# கவனயீர்ப்பு தொடர்கிறது




(கரணவாய்)

காணாமற் போனோ ரின் உறவினர்களால் மருதங் கேணியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கவனயீர்ப்பு போராட்டம் நூறாவது நாளை தாண்டியும் தொடர்ந்து இடம் பெற்றுவருகிறது. (இ-60)

# மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன் காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை விழா நாளை 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோண்மணி கலையரங்கில் இடம் பெறும். (இ-7)

# பொங்கல் உற்சவம்

தென்மராட்சி நுணாவில் காட்டாடு வயல் வைரவர் கோயில் பொங்கல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-10-101)

## மாணிக்கவாசகர் குருபூசையை முன்னிட்டு ஈழத்து சிதம்பரத்தில் விசேட நிகழ்வுகள்

மாணிக்கவாசகர் குருபூசை தினத்தை முன்னிட்டு காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் நாளை 28 ஆம் திகதி புதன்கிழமை மாணிக்கவாசகர் திருவடி போற்றி துதிக்கும் நிகழ்வுகள் இடம் பெறும்.

இந்நிகழ்வில் திருவாசகம் முற்றோதல், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அபிஷேகம், அஷ்டோத்தர சத நாம வழிபாடு, திருவடிகளுக்கு பூச்சொரிந்து வணங்குதல், மாணிக்கவாசக போற்றிப் பனுவல், தலபுராணம் என்பன இடம் பெற்று மகேஸ்வர பூஜையும் இடம் பெறும்.

அடியவர்கள் மாணிக்கவாசகசுவாமிகளின் அஷ்டோத்தர சத நாம வழிபாட்டு நூலினை மடலாயத்தில் பெற்று ஓதிப் பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)






திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் ஆக்கத்திறன் கண்காட்சி பணிப்பாளர் திருமதி கர்ணி தனபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.செவ்வேள், பொருளியல்துறை தலைவர் உதயகுமார் ஆகியோர் சிறுவர்களுக்குப் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

பனை அபிவிருத்திச் சபையினரால் பனைசார் உணவு உற்பத்தி பயிற்சி மற்றும் பனைமர உற்பத்திகளுக்கான அழகு உருப் பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயது தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மூன்று மாத கால இப் பயிற்சி நெறிக்கு மாதாந்தஊக்குவிப்புத்தொகையாக 3000 ரூபா வழங்கப்படும்.

இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் இம் மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் எனவும் விண்ணப்பங்களை தலைவர், பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என் னும் முகவரியில் நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-10-102)



மறைந்த இராசநாயகி திருச்செந்திநாதனின் முதலாமாண்டு நினைவாக இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய மருத்துவர்களின் மரணம் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது.... (படங்கள்:- கட்டுடை செய்தியாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது...

69

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட்டம் தயாரித்ததால் அதற்குப் போட்டியாக வடக்கு மாகாண சபையும் தீர்வுத் திட்டம் தயாரித்தது. அந்தத் தீர்வுத் திட்டம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரிடம் கையளிக்கப்பட்டதோடு அதன் ஆயுள் முடிந்து போனது. தமிழ் மக்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்க வடக்கு மாகாண சபை, தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராகத் தீர்வுத் திட்டம் தயாரித்தது எனில் அவர்களின் மனநிலை எப்படியாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்வதில் அதிக கடினம் இருக்க முடியாது.

இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் தமிழ் அரசியல் தலைவர்களைச் அவரைச் சந்திக்கும் போது அவர்களின் முதலாவது கேள்வி, இனப் பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் தீர்வு என்ன என்பதுதான். இந்நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவை தமிழ் அரசியல் கட்சிகள், துறைசார் விற்பன்னர்களின் துணைகொண்டு தீர்வுத்திட்ட முன்மொழிவைத் தயாரித்தது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அரசியல் உப குழுவின் இணைப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன் முதலமைச்சரிடம் தீர்வுத் திட்ட வரைபை கையளித்தார். தொடர்ந்து இத்தீர்வுத் திட்ட வரைபு மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்பட்டது.

மக்களின் கருத்தறிந்து சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் சேர்க்கப்பட்டும் விலக்கப்பட வேண்டிய விடயங்கள் விலக்கப்பட்டும் தீர்வுத் திட்ட முன்மொழிவு வெளியிடப்பட்டது. வெளிநாட்டுத் தூதுவர்களிடம் பேரவை தயாரித்த தீர்வுத் திட்ட முன்மொழிவு கையளிக்கப்பட்டது. இஃது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை.



தமிழ் மக்கள் பேரவையின்தீர்வுத்திட்ட வரைபு வெளியீட்டின்போது மக்கள் வெள்ளம்

இதனாலேயே அவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தனர். ஆனால் அவர்களால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திற்கு என்ன நடந்தது என்பதுதான் இன்னமும் புரியாத புதிராக உள்ளது.

தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் பேரவையில் இருந்து முதலமைச்சரை அந்நியப் படுத்துவதே அவர்களின் நோக்காக இருந்தது.

ஒரு நல்ல நோக்குடன் தமிழ் மக்களின் நலன்கருதி உருவாக்கப் பட்ட மக்கள் அமைப்பான தமிழ் மக்கள் பேரவையை வடக்கு மாகாண சபை இருகரம் நீட்டி வரவேற்றிருந்தால் இன்று வடக்கு மாகாண சபையும் தமிழ் மக்கள் பேரவையும் இணைந்து மக்கள் நலத்திட்டங்களை ஆரம்பித்திருக்க முடியும்.

என்ன செய்வது, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களைப் பொறுத்தவரை அடுத்த முறை பாராளுமன்ற உறுப்பினர்களாக வேண்டும். இதற்காக தமிழ்மக்கள் தொடர்பில் எந்த அமைப்புகள் உருவாகினாலும் அது தமது பதவி ஆசைக்கு ஆபத்தானது என்ற பார்வை இருப்பதால் தான் அவர்கள் தமிழ் மக்கள் பேரவையை ஓரங்கட்ட முற்பட்டனர். இவை ஒருபுறம் இருக்க, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக செயற்படுவதற்காக வடக்கு மாகாண சபையில் ஒன்று சேர்ந்த ஒரு குறிப்பிட்ட உறுப்பினர்களைக் கொண்ட அணி அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டை முன்வைத்து விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரியிருந்தனர். குறிப்பாக அமைச்சர் ஐங்கரநேசன் மீது இலக்கு வைத்து அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு முதலமைச்சர் இணங்கிக் கொண்டார்.

இதற்கமைய அவர் ஒரு விசாரணைக்குழுவை அமைத்தார். அந்தவிவகாரக் குழு தனது பணியை முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் மீண்டுமோர் பிரச்சினை வடக்கு மாகாண சபையை நோக்கி வருகிறது.

அபிவிருத்தி கருதிய நோக்கில் பொருளாதார மையங்களை நாட்டின் சில பாகங்களில் நிறுவுதல் என்ற அடிப்படையில் வடமாகாணத்திற்கான பொருளாதார மைய த்தை தாண்டிக்குளத்தில் நிறுவுதல் என அறிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் இருக்கக் கூடிய சிங்கள மக்களின் நன்மையைக் கருதியே தாண்டிக் குளத்தில் பொருளாதார மையத்தை நிறுவ அரசு நினைத்ததாயினும் வடக்கின் முதலமைச்சர் அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

முதலமைச்சரைப் பொறுத்தவரை அவர் பொருளாதார மையத்தை ஓமந்தையில் நிறுவுவதையே தெரிவு செய்தார்.

வடபகுதிக்கான பொருளா தார மையம் தாண்டிக்குளத்திலா? ஓமந்தையிலா? அமைவதென்ற வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் இது தொடர்பில் துறைசார் விற்பன்னர்களுடன் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றை தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்தது. யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் இந்த ஆலோசனைக்கூட்டம் நடந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல், அரசியல் துறைசார் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உட்பட துறைசார் நிபுணர்களும் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். தமிழ் மக்களின் நன்மைகருதி பொருளாதார மையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்துடையது என முடிவு செய்யப்பட்டு அத் தீர்மானம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இருந்தும்முதலமைச்சர் ஓமந்தையைத் தெரிவு செய்வதால் அவருக்கு எதிரான உறுப்பினர்கள் பொருளாதார மையத்தை தாண்டிக்குளத்தில் நிறுவ வேண்டுமெனக் கூறினர்.



வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்ட வரைவு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்ட போது

## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் காளான் உற்பத்தி, நல்லின மாமரச் செய்கை

## முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியொதுக்கீடான 20 இலட்சம் ரூபா நிதியில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள விவசாயப் போதனாசிரியர்கள் பிரிவுகளில் காளான் உற்பத்தி, செறிவான நல்லின மாமரச் செய்கை ஆகிய இரண்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் நடப்பாண்டுக்குரிய குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடான 20 இலட்சம் ரூபா செலவில் இரண்டு வேலைத் திட்டங்களை நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, காளான் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாண்டியன் குளம், பாலிநகர், புதுக்குடியிருப்பு ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான காளான் உற்பத்திக்கான கொட்டகைகள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன.

இதேபோன்று, நல்லின மாமரச் செய்கை செறிவான முறையில் மேற்கொள்ளும் வகையில் கிடைக்கப் பெற்றுள்ள 10 இலட்சம் ரூபா நிதி மூலம் குமுழமுனை, மாங்குளம், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, பாலிநகர் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 5 ஹெக்டேயர் நிலத்தில் குறைந்த காலப் பகுதியில் பயன்தரக்கூடிய 5,500 மாமரக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த மாமரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டதில் இருந்து பயன்தரும் வகையில் அந்தப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களினால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# கஞ்சா வைத்திருந்த ராணுவ வீரர் கைது!

(குருமன்காடு)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் இராணுவ வீரர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

மல்லாவி, நெட்டாங்கண்டல் இராணுவ முகாமில் பணியாற்றி வரும் 32 வயதுடைய இராணுவ வீரர் ஒருவர் விடுமுறையினையடுத்து அவரது சொந்த ஊரான காலிக்கு இ.போ. சபை பேருந்தில் பயணம் செய்துள்ளார்.

இதன்போது வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த இராணுவ வீரர் 68 கிராம் 62 மில்லி கிராம் நிறையுடைய கேரளா கஞ்சாவை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-250)








வவுனியா தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாடு செய்த நோன்பு பெருநாள் திடல் தொழுகை பட்டாணிச்சூர், 2 ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் மௌலவி ஆ.கு.ஸாதிக்கீன் (பாரி) தலைமையில் நேற்றுக் காலை 6.36 இற்கு நடைபெற்றது. இஸ்லாமியர்களின் புனித நோன்பு தினத்தை முன்னிட்டு இதில் பலரும் கலந்து கொண்டு விசேட தொழுகையில் ஈடுபட்டதை படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# ஆனைவிழுந்தான் கிராமத்தினுள் வெள்ளம் பரவாமல் இருக்க தடுப்பணை அமைக்குக!

## கிராம மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள்



கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்திற்குள் மழை வெள்ளம் உட்சென்று பரவாமல் தடுக்க தடுப்பணை அமைக்குமாறு கிராம மக்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்செயல்களினால் இடம் பெயர்ந்த மக்களுக்கென இக்கிராமம் உருவாக்கப்பட்டது. அவசரமாக உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் தாழ் நிலப் பகுதிகளை நோக்கி மழை காலத்தில் காட்டாறு வெள்ளம் கிராமம் முழுவதிலும் பரவுவதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

கிராமத்தின் கிழக்குப் பகுதியில் தொடங்கப்படும் அணை ஆனைவிழுந்தான் குளத்தின் அணையுடன் இணைப்பதன் மூலம் கிராமத்திற்குள் வெள்ளநீர் பரவாது எனவும் இது தொடர்பாக கடந்த 30 ஆண்டுகளாக அதிகாரிகளிடம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் வெள்ளத் தடுப்பரண் அமைக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலே அடிப்படை வசதிகள் குறைந்த கிராமங்களில் ஒன்றாக இக்கிராமம் காணப்படுவதுடன் போக்குவரத்து, கல்வி, விவசாயம் உட்பட பல வசதிகள் இக்கிராமத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் வெள்ள நீரை கிராமத்திற்குள் பரவாமல் தடுப்பதன் மூலம் கிராமம் அபிவிருத்தி அடையும் எனவும் மக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# காணிகளற்ற குடும்பங்களுக்கு மன்னாரில் இன்று காணிப்பதிவுகள்

(மல்லாவி)

மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கின்ற காணிகளற்ற குடும்பங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளவுள்ளதாக மன்னார் நகர பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் குடியிருப்பதற்கு காணிகள் இன்றி வசிக்கின்ற குடும்பங்களின் விபரங்களைத் திரட்டி அக் குடும்பங்களுக்கு மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரச காணிகளை இனம் கண்டு அதனை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எமில் நகர் கிராமத்தில் உள்ள மீள் எழுச்சி மண்டபத்தில் காணி இல்லாதவர்களுக்கான பதிவுகள் நடைபெறவுள்ளன. எனவே இச் சந்தர்ப் பத்தை காணிகள் இல்லாத மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)

# தினசரி பௌசர் வண்டிகள் ஊடாக ஒரு லட்சம் லீற்றர் குடிநீர் விநியோகம்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவிப்பு



(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் குடிநீர் தேவையான கிராம மக்களுக்கு தினசரி ஒரு இலட்சம் லீற்றர் குடிநீர் விநியோகம் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுலசிங் - அனுருத்தனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது கடுமையான வரட்சி நிலவுவதால் இந்த வரட்சி தாக்கம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட 27 கிராம அலுவலர் பிரிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில், இங்குள்ள மக்களின் குடிநீர் கிணறுகளின் நீர் மட்டமும் குறைந்து வரண்டு வருகின்றது. இதனால் மக்களும், கால்நடைகளும் குடிநீர்த் தேவைக்காக அல்லல்படும் நிலை காணப்படுகின்றது.

எமது பிரதேச செயலகத்தில உள்ள 10 ஆயிரம் லீற்றர் கொள்ளளவினையுடைய 2 குடிநீர் பௌசர் வண்டிகள் ஊடாக தினசரி ஒரு இலட்சம் லீற்றர் குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன், பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பொது கிணறுகள் மூலமாகவும் மற்றும் தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் குடிநீர் விநியோயகத் திட்டம் ஊடாகவும் மக்களுக்கு பெரும்பாலான குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

இந் நிலையில், குடிநீர் தேவையான கிராம மக்கள், மற்றும் குடும்பங்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ எனக்கு கடிதம் மூலம் அறியத் தரும் போது உடனடியாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தபுரம் கிராமத்தில் அன்னாசி வயல் விழா

வன்னேரிக்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள ஸ்கந்தபுரம் கிராமத்தில் அன்னாசி வயல் விழா கடந்த 20 ஆம் திகதி வன்னேரிக் குளம் விவசாய போதனாசிரியர் ப.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஸ்கந்தபுரம் கிராமத்திலுள்ள கு.சுந்தரலிங்கம் என்பவரின் காணியில் 3 ஆயிரம் அன்னாசி நிலையங்கள் வைக்கப்பட்டு அதில் கடந்த 20 ஆம் திகதி முதன் முறையாக 46 கிலோ அன்னாசிப் பழங்கள் அறுவடை செய்யப்பட்டன.

இவ்விழாவில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சியில் இருந்து வருகை தந்த பூங்கனியியல் துறை பாடவிதான உத்தியோகத்தர் திருமதி லதா ஜனகன், உருத்திரபுர விவசாய போதனாசிரியர், அக்கராயன்குளம், ஸ்கந்தபுர கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதர அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அக்கராயன்குளம் மகா வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.







இந்நிகழ்வில் தலைமை உரை ஆற்றிய வன்னேரிக்குள விவசாய போதானாசிரியர் ப.சுரேஸ்குமார் விவசாயத்திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றியும், சட்ட வலுப்பெற்ற கமக்கார அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் அவை எப்படி செயற்பட வேண்டும் எனவும், தனது வன்னேரிக்குள விவசாய போதானாசிரியர் பிரிவில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலை மற்றும் பயிர்ச்செய்கை முறைகள் பற்றியும், விவசாயத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் பயிர்ச் சிகிச்சை முகாம் பற்றியும் கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

மேலும் தங்கள் திணைக்களத்தின் ஊடாக அக்கராயன்குள பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைய ஓர் மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கப்படும் எனவும் மாணவர்களுக்கான விவசாயம்சார் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார். வன்னேரிக்குள விவசாய போதானாசிரியர் பிரிவில் சிறுபோக காலப்பகுதியில் 22 ஏக்கரில் நெல் நாற்று நடும் இயந்திரத்தினால் நாற்று நடப்பட்டுள்ளதாகவும் 30 ஏக்கரில் விதை நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாகவும் 50 ஏக்கரில் சிறுதானிய உற்பத்திக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளதாவும் தெரிவித்தார்.

தற்போது நிலவும் வரட்சிக்கு ஏற்ப தண்ணீரை சிக்கனமாவும் வினைத் திறனாகவும் பயன்படுத்த தூவல் நீர்ப்பாசனம், தூளி நீர்ப்பாசனம், ஊடு ப்யிர்ச்செய்கை, மூடுபடை இடல் என பல கருத்துக்களை முன்வைத்தார். மாணவர்கள் இளம் விவசாய கழகத்தில் இணைந்து கல்வியோடு உங்கள் வருமானத்தையும் ஈட்ட வேண்டும். இளம் விவசாய கழகத்தின் செயற்பாடு பற்றிய கருத்துக்களையும் தெரிவித்தார். அன்னாசி செய்கை பற்றிய சிறிய கருத்துக்களை வழங்கினார்.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கிளிநொச்சியில் இருந்து வருகை தந்த பூங்கனியியல் துறை பாடவிதான உத்தியோகத்தர் திருமதி லதா ஜனகன் சிறப்புரையை ஆற்றினார். அவர் தனது உரையில் தரைப் பண்படுத்தல், நடுகைக்கான மேடை தயாரிப்பு, சேதனப் பசளை பிரயோகித்தல், கறுப்பு பொலித்தீன் இடல், நடுகைப் பொருளான அன்னாசி உறுஞ்சிகளை பரிகரித்தல், நடுகை இடைவெளி, நடுகை முறை, அசேதன பசளை அளவு, நீர் முகாமைத்துவம், செயற்கையாக பூத்தலைத் தூண்டல் தொழில்நுட்ப முறை, அறுவடை, களஞ்சியப்படுத்தல் தொழில்நுட்பம் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் ஆழமான அனுபவத்துடன் கூடிய ஆற்றுகைப்படுத்தினார். மேலும் விவசாய போதனாசிரியரின் செயற்றிறன் அவ் விழாவில் உணரப்பட்டிருப்பதால் இவரின் காலப்பகுதியில் நீங்கள் முழுமையாக விவசாயத்தில் மேம்படுவீகள். அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை எனக் கூறி செயன்முறை பயிற்சியையும் வழங்கினார்.

இவ்விழாவில் அன்னாசி செய்கை தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டன. அன்னாசிப் பழங்களும் விற்பனை செய்யப்பட்டன. (2)

வன்னி வலம்

# பல்பொருள் வாணிப நிலையத்தில் தீ!

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின

## நாச்சிக்குடாவில் சம்பவம்



(பரந்தன்)

முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் பல்பொருள் வாணிப நிலையம் தீப்பற்றி எரிந்ததில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



இச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, வர்த்தக நிலைய உரிமையாளரினால் நேற்று முன்தினம் இரவு கடை மூடப்பட்டு வீடு சென்ற நிலையில் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் உரிமையாளருக்கு நண்பர்களால் கடை தீப்பற்றி எரிந்து கொண்ளடிருப்பதாக வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாகக் கடை உரிமையாளரால் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவம், கடற்படை நீர்த்தாங்கி வாகனங்கள் உட்பட தீயணைப்பு வாகனம் என்பன தீயை அணைக்கும் முயற்சியில் இடுபட்ட பொழுதும் கடை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

குறித்த தீ திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்ற நிலையிலும் சந்தேக நபர்கள் யாரும் இது வரை கைது செய்யப்படவில்லை.

எனினும் மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15-312)

# திருடப்பட்ட 3 1/2 பவுண் நகைகள் வவுனியா பொலிஸாரால் மீட்பு

(குருமன்காடு)

திருடப்பட்ட மூன்றரைப் பவுண் நகைகள் வவுனியா பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளதுடன், அத் திருட்டுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் தப்பி ஓடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா மத்திய பேருந்து நிலையப் பகுதியில் குறித்த நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் மது, போதைவஸ்து தடுப்பு பிரிவு பொலிஸார் கடமையில் நின்றபோது சந்தேகத்திற்கு இடமான முறையில் கைப்பை ஒன்றுடன் நின்ற ஒருவரது கைப்பையை சோதனை செய்ய முயன்ற போது குறித்த நபர் தனது கைப்பையை விட்டுவிட்டு அவ் இடத்தில் இருந்து தப்பியோடியுள்ளார். அக்கைப்பையை மீட்ட பொலிஸார் அதனை சோதனை செய்த போது அதில் காப்பு, தோடு, மோதிரம் உள்ளடங்கிய மூன்றரைப்பவுண் நகைகள் காணப்பட்டுள்ளன. அதனை மீட்ட மது, போதை வஸ்து தடுப்பு பிரிவுப் பொலிஸார் அதனை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த நகைகள் திருடப்பட்ட நகைகளாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் அவற்றை தொலைத்தவர்கள் உரிய வகையில் அடையாளம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.(2-250)



வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் குடியிருக்கும் அரச ஊழியர்கள் தேவைக்காக கிராம அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வவுனியா ப.நோ.கூ. சங்கக் கிளையொன்று நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா , முல்லைத்தீவு பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன், கிராமசேவகர் அனுசியா ஆகியோர் இணைந்து திறந்து வைத்ததைப் படத்தில் காணலாம்.

(படம்:-ஓமந்தை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை சமூகத்திற்கு நிகராக முன்னேற வேண்டும் ஆறுமுகம் தொண்டமான் விருப்பம்

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பல்துறைகளில் தேர்ச்சி பெறுகின்ற போதும், எமது சமூகத்தில் அவ்வாறான நிலை இல்லையென்றும் குறிப்பிட்ட ஒரு மட்டத்தை அடைந்த பின்னர் தமது வளர்ச்சியை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவ்வாறில்லாமல், மலையக சமூகமும் பல துறைகளில் தேர்ச்சி பெற்று வாழ பழகிக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சர்வதேச தொழிலாளர் மையம் ஆகியன இணைந்து தெரிவு செய்யப்பட்ட 50 இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சியும் முயற்சியாண்மையும் தொடர்பான செயலமர்வும் நேற்று முன்தினம் ஹற்றன் சீடா வள நிலையத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சான்றிதழ் வழங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவின் உதவியுடன் மலையகத்தில் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அதற்கிணங்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சக்திவேல், கணபதி கனகராஜ் முன்னாள் மாகாண கல்வி அமைச்சர்களான அனுசா சிவராஜா, அருள்சாமி, அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வெள்ளையான் தினேஸ், நுவரெலியா பிரதேசசபை தலைவர் சதாசிவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (இ-7)



யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையும் யாழ். அறிவுத் திருக்கோவிலும் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தினம் அண்மையில் யாழ். அறிவுத் திருக்கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் அருள்நிதி அருளேஸ்வரி வேதநாயகம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் தயானந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# 100 மாணவர்களுக்கு வலைவீச்சு

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து கலவரம் ஏற்படும் வகையில் நடந்து கொண்டார்கள் மற்றும் அங்கிருந்த சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேர் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களைக் கண்டறிந்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ள மாணவர்களில் சிலர், தங்களது சொந்த இடங்களைவிட்டுத்தலை மறைவாகியுள்ளதாகவும், அவர்கள் அனைவரையும் கைது செய்வதற்காக, பொலிஸ் குழுக்கள் பல நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி செயலகம் விடுத்த கோரிக்கை பல்கலைக்கழக மாணவர்களால் நிராகரிப்பு

ஜனாதிபதி செயலகம் மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் வெளியிட்ட அறிவித்தலை ஏற்றுக் கொள்ள முடியாது என அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தின் பதில் ஏற்பாட்டாளர் மங்கள மத்துமகே' நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.

பொலிஸார் பல்கலைக்கழக மாணவர் தலைவர்களின் வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் அவர் மேலும் குற்றம்சாட்டியுள்ளார்.

மாலபே சைட்டம் நிறுவனம் தொடர்பில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரையில் அந்நிறுவனத்திற்கு மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் பட்டம் வழங்குதல் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. அபேகோன் நேற்று முன்தினம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மங்கள மத்துமகே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஜேர்மனியில் சபாநாயகர் கரு தலைமையில் சம்பந்தன், ஹக்கீம், அநுர, கயந்த, அமுனுகம

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று ஜேர்மன் நோக்கி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பயணித்துள்ளது.

இக்குழுவில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சரத் அமுனுகம, கயந்த கருணாதிலக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் ஐந்து தினங்கள் ஜேர்மனில் தங்கியிருக்கும் இக்குழுவினர் அந்நாட்டு அரசியலமைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தறியவுள்ளனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஜேர்மன் சபாநாயகர் இலங்கையில் புதிய அரசியலமைப்பிற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை கருத்திற்கொண்டு சுபீட்சமான ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான தமது முழுமையான ஒத்துழைப்புக்களை நல்குவதாக குறிப்பிட்டிருந்தார்.

இதற்காக தமது நாட்டின் அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான அனுபவத்தினை பகிர்ந்து கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். அதற்கிணங்க சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் பாராளுமன்ற அரசியல் கட்சி தலைவர்களை தமது நாட்டிற்கு வருகை தருமாறும் அழைப்பை விடுத்திருந்தார்.

இந்நிலையில் "அரசியல் பார்வை" என்ற தலைப்பில் மேற்படி விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்குழுவினர் ஜேர்மனில் காணப்படும் அரசியலமைப்பு உட்பட ஏனைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் பல்வேறு அரச உயர்மட்டத்தினரையும் துறைசார் நிபுணர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (இ-7)




## நயினை நாயகி

அலையோசை பொங்கும் கடல் - அதில்
ஆடி அசைந்து வரும் ஓடங்கள்
அதன் நடுவே அமைந்தது
அழகான நயினையூர்

நர்த்தன மேளம் முழங்க
நாகம் குடை பிடிக்க
அகிலாண்டேஸ்வரி
அன்னையவள் வீற்றிருக்க

ஆடிப்பாடி வரும்
அடியார் கூட்டம்
அகமகிழ்ந்து அனுதினம்
அன்னையை வணங்கி வர

துன்பங்கள் அகன்று
இன்பங்கள் சூழ
நல்லோர்க்கு அருள்வாள்
நயினை நாயகி

கவி, சுழிபுரத்தூர்
க.சிவகுமார்

## அம்மன் புகழை பாடுவோம்

நயினையில் நல்லாட்சி புரியும் நாயகியே
உன்னை நம்பினோர் என்றும் கெடுவதில்லை
உன் சந்நிதியில் தீராத நோய்களும்
தீர்ந்திடும் அங்கே
புதுமைகளுக்கு என்றும் பஞ்சமில்லை
உன்னை நினைத்திட நம்
துன்பங்கள் பறக்குதே
இருள் சூழ்ந்த வாழ்விலும் விடியல் தோன்றுதே
உன் புகழையே பாடி நாம் பிறவிப் பயனடைவோம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

## மாயே வருக

நெஞ்சில் உனையிருத்தி நீள நினைப்பவர்க்கு
அஞ்சல்! என வருளும் அன்னையே! - தஞ்சமென்றும்
நீயே எமக்கிங்கு நிலை பேறளிப்பதற்காய்
மாயே! வருக! மகிழ்ந்து.
அம்மா! உனதருளை அள்ளி அள்ளி நீ சொரிந்து
எம்மாநிலம் சிறந்து ஏற்ற முறத் - தம்பணியால்
இயன்ற வழியனைத்தும் எங்களவர்க்காயுழைத்தோர்
முயன்ற பணி முற்ற வினைப்பாய்!
வாயூறி நின்புகழை வாழ்த்துமடி யார்க்கிரங்கித்
தாயினும் மேலாய் அருளும் தத்துவமே - மாயையுரு
நீக்கி எம் மக்கள் என்றும் நிறை வாழ்வுக்கானவழி
ஆக்கி வைப்பதுன் கடனே யாம்!

-கலாஞானி க.சிவலிங்கம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக மக்களின் எழுச்சிக்கு ஆதரவாக பிரிட்டனில் புலம்பெயர்மக்கள் ஆர்ப்பாட்டம்







தாயகத்தில் நிகழும் மக்களின் எழுச்சிப் போராட்டங்களுக்கு புலம்பெயர் மக்களும் தமது ஆதரவை தெரிவிக்கும் வகையில் பிரித்தானியாவில் வெம்பிலி சென்ட்ரல் ஸ்டேசன் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணி முதல் ஐந்து மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எமது மக்கள் கடும் துன்பத்தில் உழலும் தருணம் பெரும் ஊழல்களில் ஈடுபட்டிருந்த அரசியல் வாதிகளுக்கு எமது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள் பிரதிநிதிகள் உள்ளடங்கிய தன்னிச்சையாக இயங்கக் கூடிய விசாரணைக்குழு அனைத்து ஊழல்களையும் விசாரிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

வடமாகாண கணக்கு வழக்குகள் மக்கள் முன் வெளிப்படையாக முன் வைக்கப்படவேண்டும். சூறையாடப்பட்ட பணம் முழுவதும் வசூலிக்கப்பட்டு மக்கள் நல சேவையில் முதலீடு செய்யப்பட வேண்டும்.

ஊழல் குற்றச்சாட்டைத் தமது அரசியல் நலன்களுக்கு பாவித்துக் கொள்ளும் தமிழ் தலைமைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மேல் இருக்கும் அரசியல் எதிர்ப்பு இத் தருணத்தில் பாவிக்கப் படுவதற்கு எதிராக மக்கள் திரண்டதை நாம் வரவேற்கிறோம்.

அரசியல் கட்சிக்குள்ளும் வெளியிலும் தலைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கான தெரிவுகள் ஜனநாயக முறையில் நிகழ வேண்டும்.

இது தனி நபர்களின் சொந்த விருப்பு வெறுப்பு சார்ந்து மக்களை மீறிய அதிகாரமாக சுருக்கப்படுவதை எதிர்க்கிறோம். தாயக மக்களின் விடுதலைக்கான அறைகூவலில் நாமும் பங்கு கொள்கிறோம்.

இலங்கை அரசின் அடக்குமுறைக்கு எதிராக போராடிய நாம் இன்று எமது "தலைமைகளின்" அரசியல் அடாவடித்தனங்களுக்கு எதிராகவும் சேர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு வரவேண்டும் எனக் கோருகிறோம்.

இளைஞர்கள்ஒன்றிணைவோம். தாயக இளைஞர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம் என்ற விடயங்களை வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# மீள் கேள்வி கோருதல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட மீள்கேள்விகளை கோருகின்றனர்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3.ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினை கொண்டிருப்பதோடு.பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்குஅமைவாக இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2233, 021 222 2234 நீடிப்பு 122) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணதொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 27.06.2017முதல் 10.07.2017 வரை அலுவலக நாட்களில் 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
6.கேள்விகள் 11.07.2017 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம்,கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.
7.கேள்வி தொடர்பான முன்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்டசெயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 03.07.2017அன்று காலை 10:30 மணிக்கு நடைபெறும்.
8. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணைவிபரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/ONUR/ EEP/IV/08/2017 | நெடுந்தீவில் விவசாயஉள்ளீடுகள் விற்பனைநிலைய கட்டடம் நிர்மாணித்தல் | 2.47 | 1,500.00 | C6, C7 & C8 | 24,700.00 | 07.11.2017 | 90 நாட்கள் |
| 02 | JF/DPS/ONUR/ EEP/IV/16/2017 | ஆரம்பசுகாதாரநிலைய கட்டடம் நிர்மாணித்தல் - பளைவீமன்காமம் | 4.20 | 1,500.00 | C6, C7 & C8 | 42,000.00 | 07.11.2017 | 90 நாட்கள் |
| 03 | JF/DPS/ONUR/ EEP/IV/19/2017 | ஆரம்பசுகாதாரநிலைய கட்டடம் நிர்மாணித்தல் - விடத்தற்பளை,சாவகச்சேரி | 4.20 | 1,500.00 | C6, C7 & C8 | 42,000.00 | 07.11.2017 | 90 நாட்கள் |
| 04 | JF/DPS/ONUR/ EEP/IV/22/2017 | நெல்லியடி மீன் சந்தை புனரமைத்தல் | 2.94 | 1,500.00 | C6, C7 & C8 | 29,400.00 | 07.11.2017 | 90 நாட்கள் |

நா.வேதநாயகன்
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்டம்

(சி-8889)


# அம்புலன்ஸ் சாரதிகள் இன்று முதல் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் சர்ச்சைக்குரிய விடயமாக மாறிவரும் மருத்துவத்துறையில் அவ்வப்போது போராட்டங்கள் நடந்து வரும் நிலையில் இன்று நோயாளர் காவு வண்டிச் சாரதிகளும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த தகவலை அகில இலங்கை சுகாதார பணி யாளர் சம்மேளனம் தெரி வித்துள்ளது.

சில உள்ளூராட்சி மன்றங்களில் நோயாளர் காவு வண்டி சேவைகள் ஆரம்பிக்கப்படாமை இருக்கின்றமை மற்றும் கிழக்கு மாகாண சாரதிகல் பதினொருபேரை வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்தல் உள்ளிட்ட சில காரணிகளின் அடிப்படையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எந்தவித விமர்சனங்களுக்கும் இடமின்றி அரசாங்கம் உரிய பதிலை வழங்க வேண்டும் என மேற்படி சம்மேளனம் அரசாங்கத்திடம் கூறியுள்ளது.

இந்த பணிப் புறக் கணிப்புப் போராட்டத்திற்கு இலங்கையின் அனைத்து சுகாதார சேவை தொழிற் சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# மதுபான உற்பத்தி நிலையத்திற்கு அனுமதி எவ்வாறு கிடைத்தது

(கொழும்பு)

அரசாங்கத்தின் கொள்கைகளை மீறும் வகையில், மட்டக்களப்பில் மதுபான உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டமை குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் செயற்பட்டுவரும் செயலணி யினால், நிதியமைச்சிடம் விளக்கம் கோரப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

போதைத் தடுப்பு தொடர்பான ஜனாதிபதிச் செயலணியானது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கல்குடா வில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மதுபானசாலைக்கு தேசிய போதைத் தடுப்புக் கொள்கைக்குப் புறம்பாகவே அனுமதி வழங்கப்பட்டுள்ள தெனவும் அதற்கான அனு மதி எவ்வாறு வழங்கப் பட்டதெனத் தெளிவுபடுத்து மாறும் அச்செயலணியினால் நிதியமைச்சிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜெயலலிதா இல்லாதது சோகமாக உள்ளது

### தி.மு.க. துரைமுருகன்



(வேலூர்)

தமிழக சட்டப்பேரவையில் ஜெயலலிதா இல்லாமல் இருப்பது சோகமாக உள்ளது என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் துரை முருகன் தெரிவித்துள்ளார்.


வேலூரில் தி.மு.க. சார்பில் கருணாநிதி பிறந்த நாள் மற்றும்சட்டப்பேரவை வைரவிழா நிகழ்ச்சி ஒன்று நடை பெற்றது. இதில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் துரை முருகன், தமிழக சட்டப்பேரவையில் ஜெயலலிதா இல்லாமல் இருபபது சோகமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், கருணாநிதி நலமுடன் உள்ளார். நாள்தோறும் பததிரிகையை படிக்கவைத்து கேட்டுக் கொள்கிறார். யாரைப் படிக்கும் என்ற வைத்தியரின் கேள்விக்கு அண்ணாவை பிடிக்கும் எனக் கூறுகிறார்"

நிகழ்ச்சியில் ஸ்டாலின் பேசுகையில், இந்தித் திணிபபு தமிழகத்திற்கு விடப்பட்ட சவால், தாய் மொழியை மாற்றுவது தாயை மாற்றுவது போல. இந்தி திணிப்பை தி.மு.க. வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது" என்று கூறினார். (3-8)

## ஐ.எஸ். மீது வான்தாக்குதல் 3 தளபதிகள் உட்பட 6 பேர் பலி



(மொசூல்)

ஈராக்கில் வான்தாக்குதலில் சிக்கி ஐ.எஸ். அமைப்பின் உள்ளூர் தளபதிகள் 3 பேர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் அவர்களது பாதுகாவலர்கள் 3 பேரும் பலி யாகியுள்ளதாக தகவல்கள் கூறு கின்றன. ஈராக் நாட்டில் ஐ.எஸ். பயங்கர வாதிகளை ஒடுக்குவதில்உள்நாட்டுபடைகளுக்கு பக்க பலமாக அமெரிக்க கூட்டுப்படைக[ள்] இருந்து வருகின்ற நிலையில் அங்கு திக்ரி[ஸ்] ஆற்றின் கிழக்கு கரையில், மொசூல் நகருக்[கு] எதிரே உள்ளதால் அபார் நகரில் ஐ.எ[ஸ்]. பயங்கரவாத அமைப்பின் உள்ளூர் தளபதிக[ள்] பதுங்கி இருந்து, ஆலோசனை கூட்டம் ஒன்[றை] நடத் திக்கொண்டிருப்பதாக ஈராக் இராணு வ[த்]துக்கு கடந்த சனிக்கிழமை இரகசிய தகவ[ல்] கிடைத்தது.


அதன்பேரில் குறிப்பிட்ட இடத்தை கு[றி] வைத்து போர் விமானம் ஒன்று குண்டு வீச[்சு] நடத்தியது.

இத்தாக்குதலில் ஐ.எஸ். அமைப் பி[ன்] உள்ளூர் தளபதிகள் 3 பேர் உயிரிழந்ததுட[ன்] அவர்களது பாது காவலர்கள் 3 பேர் பலியா[கி]யுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் நினிவே மாகாணத்தில் தா[ல்] அபார், மிகப்பெரிய மாவட்டம் என்[பது]ம். இ[தை] 201ஆ-ம் ஆண்டு ஜூன் மாதம் ஐ.எஸ். பய[ங்]கரவாதி கள் தங்கள் வசப்படுத்தி விட்டது[ம்] குறிப்பிடத்தக்கது.

இம் மாவட்டத்தை ஐ.எஸ். பயங் கரவா[தி]களிடம் இருந்து மீட்பதற்காக ஈராக் இராணு[]வம் தயாராகி வருவதாக தகவல்கள் வெ[ளி]யாகியுள் ளன. (3-8)

## மசூதிக்கு மூவர்ணத்தில் மின்விளக்குகள்



(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலத்தில், ரமழான் பண்டிகையை முன்னிட்டு மசூதி ஒன்றிற்கு தேசிய கொடியின் மூவர்ணத்தில் மின்விளக்குகள் அமைத்து அசத்தியுள்ளனர்.

இஸ்லாமியர்களின் புனித பண்டிகையான ரமழான் உற்சாகமாக உலகம் முழுவதுமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ரமழான்பண்டிகை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் களை கட்டியுள்ளது. தலைநகர் டில்லி, மும்பை, போபால் உள்ளிட்ட இடங்களில் பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றது. சிறப்பு தொழுகைகளில் இலட்சக் கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்.

இதனிடையே, ராஜஸ்தான் மாநிலத்தில், ரமழான் பண்டிகையை முன்னிட்டு மசூதி ஒன்றிற்கு தேசிய கொடியின் மூவர்ணத்தில் மின்விளக்குகள் அமைத்து ஒளிர விட்டுள்ளனர்.

பில்வரா புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள ஹபிபி மசூதியில் இந்த மூவர்ண விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. மூவர்ண விளக்கு ஒளிரவிடப்பட்ட மசூதியை அப்பகுதி வாசிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

மூவர்ணம் நமது நாட்டின் பெருமை என்று அந்த மசூதியின் இமாம் முகமது ஜாபர் முக்தர் அசாமி தெரிவித்துள்ளார். (3-8)

## அணி மாறாமல் இருக்க 30 கோடி பேரம் - மனோகரன்

(ராஜபாளையம்)

ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு செல்லாமல் இருக்க சசிகலா தரப்பில் ரூபா 30 கோடி பேரம் பேசினார்கள் என வாசு தேவநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் மனோ கரன் குற்றம்சாட்டியுள்ளார்.

ராஜபாளையத்திலுள்ள திருமண மண்டபத்தில்விருது நகர் மாவட்ட அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணி சார்பில் ராஜபாளையம் நகர, ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான பால கங்காதரன் தலைமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வாசு தேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மனோகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது.

அ.தி.மு.க.வில் பிரிவு ஏற்பட்டபோது சசிகலா அணியில் இருக்க ரூ.30 கோடி வரை பேரம் பேசப்பட்டது. பணத்துக்கு நாங்கள் அடிமையாகி, விலை போகாமல ஜெயலலிதாவின உண்மை தொண்டர் ஓ.பன்னீர்செல்வம் பக்கம் வந்து விட்டோம். 30 அல்ல 300 கோடி ரூபாய தந்தாலும் சசிகலா பக்கம் செல்ல மாட்டோம்.

விரைவில் இரட்டை இலைச் சின்னம் ஓ.பன்னீர் செல்வம் அணிக்கு கிடைக்கும். சசிகலாவின் பினாமி ஆட்சி கலைக்கப்பட வேண்டும்.

மீண்டும் ஜெயலலிதா ஆட்சி ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் [illegible] வேண்டும் என்று [illegible] (3-8)

## ஜப்பானில் நிலநடுக்கம்


(டோக்கியோ)

மத்திய ஜப்பான் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 5.6 ஆக பதிவாகி உள்ளது. இதில் 2 பேர் காயமடைந்தனர்.

மலைப்பகுதிகளுக்கிடையே அமைந்துள்ள மத்திய ஜப்பான் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5.6 ஆக பதிவாகியுள்ள நிலநடுக் கத்தில் வீடுகள் குலுங்கி, மேற்கூரைகள் இடிந்து விழுந்தன. கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம், 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. ரிக்டர் அளவுகோலில் 5.6 புள்ளிகளாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்த நிலையில் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

இந்த நில நடுக்கத்தால் பீதி அடைந்த மக்கள் கட்டடங்களை விட்டு வெளியேறி திறந்தவெளி மைதானங்



பெரிய பாறைகளும் உருண்டு சாலைகளில் விழுந்தன.

4 புவித்தட்டுகள் சந்திக்கிற இடத்தில் ஜப்பான் அமைந்துள்ளதால் அங்கு அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாகானோ மாகாணத்தில்,இனா நகரத் [illegible] களிலும், வீதிகளிலும் தஞ்சம் அடைந்தனர்.


நில நடுக்கத்தை தொடர்ந்து மத்திய ஜப்பானில் ஷின் கான்சென் புல்லட் ரெயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. அணு மின் நிலையங்களில் பிரச்சினை எதுவும் ஏற்பட்டதாக தகவல் இல்லை. (3-8)

## சிரியாவில் குண்[டு]...

### 10 பேர் பலி

(பெய்ரூட்)

சிரியா நாட்டு இட்லிப் மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 10 பேர் பரிதாபமாக [பலி]யாகியுள்ளனர். சிரியா நாட்டின் இட்லிப் மாகாணத்தில் உள்ள அல்டனா



நகரின் சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை ஏராளமான பொதுமக்கள் பொருட்கள் வாங்க குவிந்தனர்.

அப்போது சந்தை அருகே நிறுத் தப்பட்டிருந்த வெடி குண்டுகள் நிரப் பப்பட்ட காரை தீவிரவாதிகள் வெடிக்க

செய் ... மக் ... பரித ... படுக ... அங் ... வர் ... வை ... தது ... சிகி ... வெ ... குண ... குறி

## லண்டனிலுள்ள ... பாதுகாப்பு இல்[லை]

(லண்டன்)

லண்டனில் உள்ள அறுபது அடுக்கு மாடி குடியிருப்புகளில் போதுமான பாதுகாப்பு இல்லை என்று பிரித்தானிய அரசாங்கம் சார்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பிரித்தானிய தலைநகர் லண்டனில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில், கடந்த 14ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 79 பேர் பலியா

கியு ... போ ... கார ... உள் ... குளி ... வெ ... யால ... உப ... கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ல்

லி

டைகள் திக்ரிஸ் கருக்கு ஐ.எஸ். பதிகள் ஒன்றை ணு வத் தகவல்

த குறி டு வீச்சு

ப் பின் ததுடன் பலியாகி ன.

ம் தாக் . இதை . பயங் ட்டதும்

ரவாதி ராணு வெளி (3-8)

## உள்நாட்டு யுத்தத்திலிருந்து உயிர்தப்பி கொலராவுக்கு பலியான ஏமன் மக்கள்



(சனா)

ஏமன் நாட்டில் உள் நாட்டு யுத்தத்தால் பாதிக்கப் பட்டு இடம்பெயர்ந்த மக்கள் கொலரா நோய் காரணமாக 2 இலட்சம் பேர்வரை பாதிப்பு அடைந்துள்ளனர். அரபு நாடுகளில ஒன்றான ஏமனில் 2 ஆண்டு களாக உள்நாட்டு யுத்தம் நடந்து வருகிறது. அரசுக்கு எதிராக ஹூதி புரட்சி படையினர் போரிட்டு வருகிறார்கள். அவர்கள் தலைநகரம் சனா உட்பட பல நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.


உள்நாட்டு யுத்தத்தால் ஒரு கோடியே 80 இலட்சம்பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் தங்குவதற்கு போதிய இடமின்மையால் ஆங்காங்கே கூடாரங்களில் தங்கி இருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளோ மற்ற சுகாதார வசதிகளோ கிடைக்கவில்லை.

இதனால் கடந்த மாதங்களுக்கு முன்பு பல இடங்களில் கொலரா நோய் ஏற்பட்டது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய மருத்துவ குழுக்கள் இல்லை. இதனால் தொடர்ந்து கொலரா நோய் பரவி வருகிறது. தினமும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவரகள் புதிதாக கொலரா நோய தாக்குதலுக்கு ஆளாகிறார்கள்.

இதுவரை 2 இலட்சம்பேரை நோய் தாக்கியுள்ளது. 1300 பேர் உயிரிழந்துளளனர். இவர்களில் 4இல் ஒரு பங்கினர் குழந்தைகள் ஆவர். தொடர்ந்து நிலை மோசமாக உள்ளது.

எனவே, உயிரிழப்புமேலும் அதிகரிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. உரிய ஊட்டசத்துணவு கிடைக்காமல் 2 கோடியே 80 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (3-8)

## ஏரியில் மூழ்கியது படகு
## 9 பேர் பலி, 31 பேர் மாயம்



(பொகோடா)

கொலம்பியா நாட்டில் 170 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலியாகியுள்ளதுடன் 31 பேர் மாயமாகியுள்ளனர்.

கொலம்பியா நாட்டின் வடமேற்கு பகுதியில் 170 சுற்றுலா பயணிகளை ஏற்றியபடி படகு ஒன்று பீநோல் ஏரியில் சென்றுகொண்டிருந்தது. ஏரியின் மத்திய பகுதிக்கு சென்ற போது திடீரென படகு நீரில் மூழ்கத் தொடங்கியது.

இதனால் படகிலிருந்த அனைவரும் செய்வதறியாமல் கூச்சலிட்டனர். இதனைக்கேட்ட கரைப்பகுதியிலிருந்த இளைஞர்கள் படகில் இருப்பவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

ஆனால் படகிலிருந்த மக்கள் அங்கும் இங்குமாக ஓடியதில் படகு அழுத்தம் காரணமாக முற்றிலுமாக மூழ்கியது.

மீட்பு பணிகளில் படகுகள் மட்டுமல்லாமல் மூன்று ஹெலிகொப்டர்கள் பயன்படுததபபட்டதாக அந்நாட்டு இராணுவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னதாக படகு மூழ்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பையும் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ...டுத் தாக்குதல்

செய்தனர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

மேலும், 30க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்த மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்று, இறந்தவர்களின் பிரேதங்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர.



முன்னதாக, இதே நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் நடந்த குண்டு வெடிப்பில் 2 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (3-8)

## கட்டார் - அரபு நாடுகளிடையே பேச்சுவார்த்தை வேண்டும்
## அமெரிக்கா அறிவுரை

(வோஷிங்டன்)

சவுதி அரேபியா, எகிப்து உட்பட 4 நாடுகள் விதித்த 13 நிபந்தனைகளை கட்டார் ஏற்க மறுப்பு தெரிவித்து இருந்தநிலையில், சமரச பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிகா தெரிவித்துள்ளது.

சவுதி உள்ளிட்ட 4 நாடுகள் விதித்த நிபந்தனைகளை கட்டார் ஏற்க மறுத்து விட்டதைத் தொடர்ந்து அந்த நாடுகளுக்கு இடையே மோதல் போக்கு மேலும் அதிகரித்துள்ளது.

இதை யடுத்து அமெரிக்கா இரு தரப்பினரையும் சமரசப் படுத்துவதற்கு முயற்சித்து வருகிறது. இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவு மந்திரி ரெக்ஸ் டில்லர்சன் கட்டாருக்கு 4 நாடுகளும் விதித்துள்ள நிபந்தனைகள் நிறைவேற்ற முடியாத ஒன்றாக உள்ளது. எனவே நிறைவேற்றக்கூடிய நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

தீவிரவாதிகளை ஒடுக்குவது போன்ற விடயங்களில் அந்த நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முடிவுகள் எடுக்க வேண்டும். இதற்காக அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சமரசமாக செல்ல வேண்டும். மோதல் போக்கை வளரவிடக்கூடாது என்று தெரிவித்தார்.

அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சியான்ஸ்பைசர் கூறும்போது, இந்த நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை குடும்ப சண்டை போன்றது. அதை அவர்களே பேசி தீர்த்துக் கொள்வார்கள் என்று தெரிவிததார். (3-8)

## இடிபாடுகளுக்கு நடுவே கதறியழும் உறவினர்கள்

(பீஜிங்)

சீனாவில் நிலச்சரிவில் சிக்கி மாயமான 93 பேரை தேடும் பணிகளில் ஆயிரக் கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளுக்கு நடுவே மாயமானவர்களின் உறவினர்கள் கதறி அழுது கொண்டிருக்கின்றனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியான சிச்சுவான் மாகாணத்தில் மாவோக்ஸியன் கவுண்டியில், சின்மோ என்ற மலைப்பாங்கான கிராமம் உள்ளது.



இக்கிராமம், திபெத்தை யொட்டிய பகுதியில் அமைந்துள்ளது.

அங்கு பலத்த மழை பெய்து வந்த நிலையில், அக்கிராமத்தில் பயங்கரமான நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்நிலையில், நிலச்சரிவில் சிக்கிமாயமான 93 பேரை தேடும் பணிகளில் ஆயிரக் கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர்.

இடிபாடுகளுக்கு நடுவே மாயமானவர்களின் உறவினர்கள் கதறி அழுது கொண்டிருக்கின்றனர்.

இதனிடையே சீனாவில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட பெருவெள்ளத்திற்கு பலியானோர் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது. (3-8)

## ...ள 60 குடியிருப்புகளில் ...லை? அரசாங்கம் தகவல்

...கியுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இத் தீ விபத்திற்கு முக்கிய காரணம் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் பழுதாகி இருந்த குளிர்சாதன பெட்டியில் இருந்து வெளிப்பட்ட தீ தான் எனவும் முறையான பராமரிப்பு மற்றும் தீ தடுப்பு உபகரணங்கள் இல்லாததும் ஒரு காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து லண்டனில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளதா, அங்கு தீயணைப்பு உபகரணங்கள் போன்றவைகள் உள்ளனவா என்பவை குறித்து சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதில் தற்போதுவரை நடத்தப்பட்ட சோதனையில் 60அடுக்குமாடி குடி யிருப்புகள் பாதுகாப்பு அற்றவை என்று பிரித்தானிய அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு லண்டனில் இருந்த சுமார் 4000 பேர் அவர்கள் இருக்கும் குடியிருப்பு பாதுகாப்பு அற்றது என்று வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 வெளிநாட்டுத் தூதுவர்கள் நாட்டுக்கு திருப்பி அழைப்பு

## வெளிவிவகார அமைச்சர் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

வினைத்திறனுடன் செயற்படவில்லை என்பதால் மூன்று வெளிநாடுகளுக்கான தூதுவர்களை இலங்கை அரசாங்கம் கொழும்புக்குத் திருப்பி அழைத்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனரா? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் பதிலளித்த போதே, மூன்று நாடுகளில் பணியாற்றிய இலங்கை தூதுவர்கள் போதிய வினைத்திறனுடன் செயற்படவில்லை என்பதற்காக திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

எனினும், திருப்பி அழைக்கப்பட்ட தூதுவர்கள் யார் என்ற விபரங்களை அவர் வெளியிட மறுத்து விட்டார்.

"தூதரகங்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டும். வினைத்திறன் அற்றவர்கள் இராஜதந்திரப் பதவிகளில் இருந்து, பொதுமக்களின் பணத்தில் நேரத்தை செலவிடுவதற்கு அனுமதிக்க முடியாது. வெளிநாட்டு முதலீட்டை கவரும் வகையில், வர்த்தக இராஜதந்திரத்தை ஊக்குவிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்துக் கலந்துரையாடுவதற்காக இலங்கையிலுள்ள தூதுவர்கள், துணைத் தூதுவர்களை செப்டெம்பர் 4ஆம் திகதி ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

வெளிநாடுகளில் இலங்கைக்கு 63 தூதரகங்கள் உள்ளன. தேவைப்பட்டால் அவை தரமுயர்த்தப்படும். சில தூதரகங்கள் மூடப்ப டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைக் கடற்படையை வலுப்படுத்த பிரான்ஸ் உதவும்

## அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்கொள்ளை மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு, இலங்கைக்கு பிரான்ஸ் உதவும் என்று இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் ஜீன் மரின் சூ தெரிவித்துள்ளார்.

இலங்கை கட்றபடைக்கு உதவ எமது நாடு விருப்பம் கொண்டுள்ளது. ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல், கடற்கொள்ளை என்பன பூகோள சவால்களாக இருக்கின்றன. அதனை கூட்டாக எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கையில் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு பிரான்ஸ் இணை அனுசரணை வழங்கியிருந்தது. இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளை பிரான்ஸ் வரவேற்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கொழும்பு வந்துள்ள பிரெஞ்சுக் கடற்படையின் உலங்குவானூர்தி தாங்கி கப்பலான மிஸ்ராலின் கட்டளை அதிகாரி கப்டன் ஸ்ரனிஸ்லஸ் டி சார்கெரெஸ், கருத்து வெளியிடுகையில், இலங்கை கடற்படையுடன் இணைந்து, பிரெஞ்சுக் கடற்படையின் சிறப்புப் படையினர், கடற்கொள்ளை எதிர்ப்பு, போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவை அழைக்க வேண்டாம் என பாகிஸ்தானிடம் கோரியதாம் அரசு

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின், பாகிஸ்தான் பயணத்தைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சித்ததாக, கூட்டு எதிரணி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் கூட்டு எதிரணியின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில்,

பாகிஸ்தான் அரசின் அழைப்பின் பேரில், மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியைச் சேர்ந்த குழுவினர் கடந்த 19 ஆம் திகதி பாகிஸ்தான் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவில் ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, உதித் லொக்குபண்டார ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பாகிஸ்தான் பயணத்தின் போது, மகிந்த ராஜபக்ஷ மேற்குலக நாடுகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

2009இல் விடுதலைப் புலிகள் வன்னியின் கிழப்பு முனையில் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருந்த போது, அவர்களை மீட்க முனைந்தவர்கள் இப்போது தீவிரவாதத்துக்கு எதிரான கடுமையான நடவடிக்கை எடுக்க கோருகின்றனர்.

உயர் இலக்குகள் மீதான தாக்குதல்களை அடுத்து, மேற்குலகத் தலைவர்கள் முன்னெப்போதும் இல்லாத பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், மேற்குலகம் இரட்டை வேடம் போடுவதாகவும், போரின் போதும் போருக்குப் பின்னரும், இலங்கையை இலக்கு வைத்ததாகவும், அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ குழுவினர், பாகிஸ்தான் ஜனாதிபதி மம்நூன் ஹுசெய்ன் மற்றும் பல மூத்த அரசியல்வாதிகள், அதிகாரிகளையும் சந்தித்திருந்தனர்.

பாகிஸ்தான் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஒன்றை நிகழ்த்தியிருந்த மகிந்த ராஜபக்ஷ, இஸ்லாமாபாத்தில் உள்ள செரீனா விடுதியில் உயர்மட்ட அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், ஊடகங்கள் பங்கு பற்றிய கருத்தரங்கு ஒன்றிலும் பங்கேற்றிருந்தார். இதன்போது தீவிரவாதத்தை தோற்கடிப்பதற்காக பூகோள முயற்சிகள் தேவைப்படுவதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் பயணத்தை தடுக்குமாறு இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானைக் கேட்டுக்கொண்டதாக கூட்டு எதிரணியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

நட்பு நாடு ஒன்றின் அழைப்பின் பேரில், முன்னாள் ஜனாதிபதி ஒருவர் மேற்கொள்ளவிருந்த பயணத்தை தடுக்கும் முயற்சிகள் இதற்கு முன்னொரு போதும் மேற்கொள்ளப்பட்டதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இயற்கை நம்மைக் கட்டிப் போடுவதா?

இம்முறை கொஞ்சம் சுயபுராணம். ஆனால், காரணத்தோடுதான். ஏங்க, மழை அடிச்சிக்கிட்டு இப்படி ஊத்துதே. இந்தக் கொட்டுற மழையில நீங்க ஊருக்குப் போகத்தான் வேண்டுமா?என்று கேட்பாள் என் மனைவி.

இந்த போகாதே, போகாதே என் கணவா!வெல்லாம் என்னை மாற்றியதே இல்லை. புறப்பட்டு விடுவேன். தாம்பரம் தாண்டியதும் மழையே இராது. ஊருக்குப் போய் வேகாத வெயிலில் அலைந்து திரிந்து கலந்து கொள்ள வேண்டிய திருமணத்திலும் கலந்து கொண்டு விட்டு, ஆகவேண்டிய வேலைகளை முடித்துவிட்டு வருவேன்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில், காஞ்சிபுரத்திலிருந்து ஸ்கூட்டரில் புறப்பட்டபோது, செம்மையான மழை, ஒன்றும் நிற்பதாகக் காணோம். நானும் மரத்தடியில் ஒதுங்குவதாக இல்லை. 40 கி.மீ. வேகத்தில் பயணம் செய்து சுமார் இரண்டரை மணி நேரம் நனைந்தபடியே சென்னைக்கு வந்தேன். மழைத்துளி ஒவ்வொன்றும் சிறு கற்களால் அடிப்பதைப் போல்... லொறி வெளிச்சம் கண்களைப் பறிக்க... மேடு பள்ளம் தெரியாமல், உடலைக் குளிர்வாட்ட கொடுமை எனினும் எதுவும் என் பயணத்தை நிறுத்தவில்லை, உடம்புக்கு முடியாமல் போனதும் இல்லை. அது முதல் இயற்கை மீது அலட்சியப் பார்வைகள்.

ஊரே வெள்ளக் காடாக ஆனாலும் என் அலுவலக விஜயத்தை அது தடுத்து நிறுத்தியதே கிடையாது.

மார்கழி மாதத்தின் கடுமையான குளிருக்குக் கூட நான் விடிகாலை எழுவதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் இருந்ததில்லை. ஊட்டிக்குப் போனாலும் விடிகாலைக் குளிரில் எழுந்து எழுந்து வேலைகளைப் பார்ப்பேன்.

கடற்கரைக்கும் சினிமாவுக்கும் புறப்படுகிற நேரத்தில் செம்மையாக மழை ஆரம்பமா? நாளை பார்த்துக்கலாம் என்று தள்ளிப் போட்டதே இல்லை. மழை பெய்யும் போது கடற்கரை எப்படி இருக்கும் என்று பார்த்து வருவேன்.

உடம்பைக் கெடுத்துக் கொள்ளாத – உடல் நலனுக்குக் கேடு இல்லாத – இயற்கையுடனான போராட்டத்தில் தவறே இல்லை. நம் முன்னேற்றங்களையும், திட்டங்களையும் செயற்பாடுகளையும் இயற்கையின் சிறு எதிர்ப்பின் முன் மண்டியிட்டுவிட அனுமதிக்கக் கூடாது.

எஸ்கிமோக்கள் எவ்வளவு கடுமையான குளிரில் இயல்பான வாழ்க்கை வாழ்கிறார்கள் தெரியுமா? ஆபிரிக்காவில் உடம்பை உருக்கும் வெயிலில் மக்கள் எப்படிப் பாடுபடுகிறார்கள் தெரியுமா? இவர்களைப் பார்க்கும்போது சொர்க்கமான தட்பவெப்ப நிலையில் நாம் வாழ்கிறோம் என்பேன்.

ஏன் வரவில்லை? ஏன் அதைச் செய்யவில்லை? என்று நான் கேட்கும் போது, யாராவது மழையையும் வெயிலையும் குளிரையும் காரணமாகச் சொன்னால் எனக்குப் பற்றிக் கொண்டும் வருகின்றது. அதே நேரத்தில் அவர்களைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருக்கிறது.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஈதுல் பித்ர்" நோன்புப்பெருநாளை முன்னிட்டு நேற்றையதினம் யாழ்., கிளிநொச்சி உலமா சபை மற்றும் அனைத்து பள்ளிவாசல் நிர்வாக சபையினரும் இணைந்து ஏற்பாடு செய்த முஸ்லிம் மக்களுக்கான பெருநாள் தொழுகை ஏற்பாடுகள் மௌலவி அப்துல் அஸீஸ் (காசிமி) தலைமையில் யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெற்றது. இதேவேளை பெண்களுக்கான தொழுகை யாழ். ஒஸ்மானியா கல்லூரி உள்ளக வளாகத்திலும் யாழ்ப்பாணம் பூங்காவிற்கு முன்னால் இருக்கும் யாழ்.மாநகர மைதானத்திலும் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பெருநாள் தொழுகை அஷ்-ஷெய்க் பைசல் (மதனி) தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:- பொ.சோபிகா)

# நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்த உணவு காராமணி



நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்த உணவான காராமணியில் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. இவற்றை காலை, மாலை, இரவு என ஆகிய மூன்று நேரங்களிலும் எடுத்துக் கொள்வதால் பல்வேறு ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கின்றன.

பி காம்ப்ளக்ஸ், கனிமச் சத்துக்கள், விற்றமின் கே, விற்றமின் சி மாச்சத்து, புரதச்சத்து, மக்னீசியம், இரும்பு, பொஸ்பரஸ் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.

மருத்துவ பயன்கள்

உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றும், வயிற்றுப்புற்றுநோயை தடுக்கும் ஆற்றல் உண்டு,வளரும் குழந்தைகளுக்கு மிகவும் உகந்தது.

உணவைக் குறைத்து சக்தியையும் இழக்காமல் உடல் எடையைக் குறைக்க விரும்புகிறவர்கள் காராமணியை காலை மற்றும் மதியம் எடுத்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் 1/2 கப் அளவு காராமணியில் ஒரு கிராம் கொழுப்பு உள்ளது.

காராமணியில் உள்ள துத்தநாக உப்பு, லெப்டின் என்ற இயக்குநீரை தாராளமாகச் சுரக்க வைக்கும். இந்த இயக்குநீர் இரத்தத்தில் நிறைய இருக்கும்போது மூளைக்கு சாப்பிட்டது போதும் என்ற சமிக்ஞையைத் தந்துவிடும்.

இதில் நிறைந்துள்ள விற்றமின் கே, மூளையின் செயற்பாட்டை சீராக வைக்கும். குறிப்பாக இது எலும்புகளை வலுவோடு வைப்பதற்கு பெரிதும் உதவியாக உள்ளது.

Anti-oxidants அதிகமாக நிறைந்துள்ளதால் உடலில் உள்ள புற்றுநோய் செல்களை அழித்துவிடும்.

சிறுநீரகப் பிரச்சினை மற்றும் வயிற்று உபாதைகள் உள்ளவர்கள் இதனை உட்கொள்ளலாம்.

flavonoids நிறைந்துள்ளதால் இதயம் சம்பந்தமான நோய்களை குணமாக்கும்.

பக்கவாதம்(stroke), உயர் இரத்த அழுத்தம் (hypertension), ஆஸ்டியோபோரோசிஸ்(osteoporosis) போன்ற நோய்களுக்கு தீர்வு அளிக்கும்.

முகச்சுருங்களை போக்கி தோல்களை மென்மையாக வைத்திருக்க உதவும், மேலும் முடி வளர்ச்சிக்கும் உதவுகிறது.

நார்ச்சத்து இருப்பதால், இது இருதய நோய் ஏற்படுவதை தடுக்கும். மேலும் இதில் பொட்டாசியம், இரும்புச்சத்து, விற்றமின் சி நிறைந்துள்ளது.

# உங்கள் உடலில் போதியளவு நீர் இல்லை என்பதை வெளிப்படுத்தும் அறிகுறிகள்



உடலில் போதியளவு நீரின் அளவு இல்லாததை தான் நீர் வரட்சி என கூறுகிறோம்.

நீர்சத்து குறைந்தால் உடலில் ஏற்படும் பிரச்சினைகளை பற்றி அறிந்து கொள்ளலாம்.

உடலில் நீர் சத்து - அளவு குறைந்தால் இரத்தத்தின் அடர்த்தி குறையும்.

இதனால், இரத்த ஓட்டம் தடைப்படும், உடல் உறுப்புகளின் செயல்பாடு குறையும், செரிமான சிக்கல்கள் ஏற்படும்.

உடலில் நீர் சத்து குறைவாக இருக்கிறது என்பதை எப்படி கண்டறியலாம்?

சில அறிகுறிகளை வைத்து உங்கள் உடலில் நீர் வறட்சி ஏற்பட்டுள்ளதை அறியலாம்.

மேலும், நீங்கள் சரியான அளவு நீர் குடித்து வருகிறீர்கள் என்பதையும் சில அறிகுறிகளை வைத்து அறியலாம்.

முகப்பரு

உங்கள் உடலில் நீர் வறட்சி ஏற்பட்டுள்ளது அல்லது போதியளவு நீர்சத்து இல்லை எனில், முகப்பரு அதிகரிக்க ஆரம்பிக்கும். நீங்கள் போதியளவு நீர் பருகினாலே உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேற்றப்பட்டு முகப்பரு ஏற்படுவதை குறைக்க முடியும்.

வேனிற்கட்டி - வெங்குரு (Sun Burn)

உடலில் போதியளவு நீர் இல்லையெனில், சூரிய கதிர் - வெப்பம் அதிகமாக வெளிப்படும் இடத்தில் அதிக நேரம் இருந்தால் வெங்குரு / வேனிற்கட்டி உருவாகும். நீங்கள் சரியான அளவு தண்ணீர் பருக ஆரம்பித்தால் தானாக இந்த பிரச்சினை குறைந்துவிடும்.

கண்

உடலில் நீர் வறட்சி ஏற்பட்டால், கண்களுக்கு கீழே குழி போல (Eye Bag) விழ ஆரம்பித்துவிடும்.

சிவந்த மூக்கு

மூக்கின் சருமம் வரட்சியாக மாறும். எரிச்சல் உணர்வு இருக்கும். உங்கள் உடலில் போதியளவு நீர் சத்து இல்லை என்பதை வெளிகாட்டும் அறிகுறி தான் இது.

ஹேங்கோவர்

உங்கள் உடலில் நீர்சத்து க்குறைவாக இருந்தால், அற்கஹோல் போதை அதிகமாக இருக்கும். நீங்கள் சரியான அளவு நீர் அன்றாடம் குடித்து வந்தாலே இதை தவிர்க்க முடியும்.

உச்சந்தலை



நீங்கள் சரியான அளவு நீர் குடித்து வருகிறீர்கள் என்பதற்கான முதல் அறிகுறி. உங்கள் உச்சந்தலை ஆரோக்கியமாக இருக்கும். அரிப்பு, எரிச்சல், பொடுகு, என எந்த தொல்லையும் இருக்காது.

முடி, நகம்

உடலில் நீர்ச்சத்து சரியாக இருந்தால் உங்கள் முடி மற்றும் நகங்கள் வலிமையாக இருக்கும். முடி உதிர்தல், உடைதல் பிரச்சினைகள் இருக்காது. (முடி உதிர்வது மரபணு சார்ந்தும் இருக்க வாய்ப்புகள் இருக்கின்றன)

பிரகாசமான பார்வை

நீர்வரட்சி ஏற்படுவதால் பொட்டாசியம் மற்றும் எலக்ட்ரோலைட் அளவில் குறைபாடு ஏற்பட்டு கண் ஆரோக்கியம் குறைகிறது. எனவே, சரியான அளவு தண்ணீர் குடித்து வந்தால், கண்கள் பளிச்சென ஆரோக்கியமாக இருக்கும்.

உடல் எடை

உணவருந்துவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்பு 2 கப் நீர் குடித்து வந்தால் உடல் எடையை குறைக்க முடியும்.

சருமம்

நீங்கள் சரியான அளவு தண்ணீர் குடித்து வந்தால், உங்கள் சருமம் மிருது வாகவும், சுருக்கங்கள் இன்றியும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானைத் தாக்குதலுக்கு இலக்காகி சிறுவன் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை, நிலாவெளி 10ஆம் கட்டை பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 13 வயது சிறுவனே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஒற்றையாட்சி என்ற பதத்தை இல்லாதொழிக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சி என்ற பதத்திற்கு பதில் மாற்று பதம் ஒன்றை பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

ஒற்றையாட்சி என்ற பதத்துக்கு சிங்களத்தில் "ஏக்கிய" என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த ஏக்கிய என்ற ஒற்றையாட்சிக்குள் அதிகாரத்தை பகிர முடியாது என்று தமிழ் தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

ஐக்கிய இலங்கைக்குள்ளேயே அதிகாரத்தை பகிர முடியும் என்று அவை கோரி வருகின்றன.

இந்தநிலையில் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் ஏக்கிய என்ற பதத்தை நீக்கும் வகையிலேயே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

## இனவாத அடிப்படையிலேயே இந்த அரசு செயற்படுகிறது

### ஜோன்ஸ்டன் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

இந்த அரசாங்கம் இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

தம்பதெனியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனவாதத்தை தூண்ட வேண்டாம் எனக் கூறிக் கொண்டே இந்த அரசாங்கம் பௌத்த தேரர்களை சிறையில் அடைக்கின்றது.

மகிந்தவுடன் இருக்கும் அனைவரையும், நான் உள்ளிட்ட எல்லோரையும் சிறையில் போட்டார்கள்.

மகிந்தவின் பிள்ளைகள் இருவரையும்சிறையில்அடைத்தார்கள். எனினும் அவரது தன்னம்பிக்கையை எவராலும் ஒரு கடுகளவேனும் குறைத்துவிட முடியாது.

இந்த அரசாங்கம் அபிவிருத்தியை நிறுத்திவிட்டு பழிவாங்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காண்பித்து வருகின்றது.

அரசாங்கம் மக்களின் வாக்குரிமையை பறித்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

தேர்தல் ஒன்று நடத்தப் பட்டால் மக்கள் தகுந்த பாடத்தை அரசாங்கத்திற்கு புகட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## டாக்டர் பாதெனிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முயற்சி

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் பாதெனிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றார் என மாலபே தனியார் மருத்துவ கல்லூரியின் தலைவர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக செயற்படும் நபர்களின் பின்னணியில் இயங்கி வரும் டாக்டர் பாதெனியவின் நோக்கம், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகும்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பாரியளவில் போராட்டம் நடத்தப்பட்டால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் வீதியில் இறங்கி செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான போராட்டத்திற்கு பொதுமக்களின் ஆதரவு கிடைக்காது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான போராட்டம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தேவைக்காக நடத்தப்படுகின்றது.

தமது வைத்தியசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு அதனை டெங்கு நோய் தவிர்ப்பு பிரிவாக மாற்றியது வரவேற்கத்தக்க விடயமாகும்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் நேற்று அதிகாலை ஒருவர் பலி!

நேற்று அதிகாலை வரகாபொல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொள்ளையர்களை நோக்கி பொலிஸார் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக, தெரியவந்துள்ளது.

நகரில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்ளையிட வந்தவர், தொடர்பில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அங்கு வந்த பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொள்ளையர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வரகாபொல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (இ-7)

### பொலிஸ்மா அதிபரிடம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு

## பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து அறிக்கை கோரல்

(கொழும்பு)

போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக, அந்த ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே சுட்டிக்காட்டியுள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு வலியுறுத்தி அண்மையில் மாணவர்கள் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்ததாக கூறப்பட்டு இவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் இந்த் தாக்குதலால் 80 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புத்தளத்தில் கடும் வரட்சி

புத்தளத்தில் தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலை இன்னும் சில நாட்களுக்கு நீடித்தால், நீர் நிலைகள் வற்றிப்போகக் கூடும்என்று புத்தளம்மாவட்ட செயலாளர் எம்.என். சித்ரானந்த தெரிவித்தார்.

குழாய்க்கிணறுகள் மூலமாக தண்ணீரைப் பெறும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

புத்தளத்தில் 32 கிராம சேவகர் பிரிவுகளில் 26,418 குடும்பங்களைச் சேர்ந்த 92,449 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வற்றிய குளங்களை, இப் பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## முஸ்லிம்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்கின்றன

### கிழக்கு முதல்வர் கவலை

கடந்த காலங்களைப் போன்றே தற்போதும் முஸ்லிம் சமூகத்தை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், முஸ்லிம்கள் அச்சமின்றி வாழும் சூழலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் கடமையென தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த ரம்ழானைப் போன்று இந்த ரம்ழானிலும் முஸ்லிங்களை அச்சமூட்டும் செயற்பாடுகளும் அச்சுறுத்தல்களும் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. முஸ்லிம்களின் மத தலங்களின் மீதான தாக்குதல்கள், வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் என தொடர்ச்சியாக முஸ்லிம் சமூகத்தை அச்சமூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் அடுத்த நோன்பு காலத்திலாவது முஸ்லிம்கள் நிம்மதியாகவும் அச்சமின்றியும் தமது மார்க்கக் கடமைகளை முன்னெடுக்கக்கூடிய சூழ் நிலையை அரசாங்கம் ஏற்படுத்த முன்வரவேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளினாலேயே முஸ்லிம்கள் நல்லாட்சிக்கு தமது வாக்கினை அளித்தனர்.

ஆனால் இந்த ஆட்சியிலும் சில அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இனவாதிகள் சுதந்திரமாக இனவாதத்தை கக்கிய வண்ணம் வலம் வருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது இந்த நல்லாட்சியை சீர்குலைக்க சதிகார சக்திகள் முன்னெடுக்கும் திட்டங்கள் என்றால் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொலிஸார், இனவாதிகள் மீது நெகிழ்வுப் போக்கை கடைபிடிக்காமல் தராதரம் பாராது சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

அவ்வாறில்லாமல் இனவாதத்தை முன்னெடுப்போர் மீது நெகிழ்வுப் போக்கு கடைப்பிடிக்கப்படுமேயானால் அதன்மூலம் இந்த அரசாங்கம், பொலிஸ் மற்றும் நீதித்துறை மீது மக்களின் நம்பிக்கை அற்றுப் போகும் நிலையே உருவாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழகத்திலிருந்து ஹெரோயின் போதைப்பொருள் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஹெரோயின் போதைப் பொருள் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடல் வழிப் பாதையை பயன்படுத்தியே அதிகளவில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயின், கொக்கேய்ன், கஞ்சா, எல்.எஸ்.டி. போன்ற போதைப் பொருள் வகைகள் அதிகளவில் கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கென பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



கேலிச்சித்திரம்

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக வடமராட்சியில் விழிப்புணர்வு



போதைப்பொருள் பாவனை பற்றி வினாத்தொடுப்போம் அறிவைப் பெறுவோம் எனும் தொனிப் பொருளில் துண்டுப்பிரசுர விநியோகமும் கருத்துரை வழங்கலும் நேற்று திங்கட்கிழமை வடமராட்சியில் நடைபெற்றது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு காலை 9.30 மணியிலிருந்து 10.30 மணிவரை வல்வெட்டித்துறை பேருந்து நிலையத்திலும் முற்பகல் 10.45 மணியில் இருந்து 11.30 மணிவரை நெல்லியடி பேருந்து நிலையத்திலும் அதன் பின்னர் 11.45 மணியிலிருந்து 12.30 மணிவரை பருத்தித்துறை பேருந்து நிலையத்திலும் நடைபெற்றது.

இதன்மூலம் போதைப்பொருள் சம்பந்தமான விழிப்புணர்வினை மக்கள் பெற்றுக் கொண்டனர். (இ-60)

# சட்டத்தரணி லக்ஷான் டயஸ் நாட்டைவிட்டு வெளியேறினார்

## அரசின் அச்சுறுத்தல் காரணமா?

(கொழும்பு)

சட்டத்தரணியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான லக்ஷான் டயஸ் தனிப்பட்ட பாதுகாப்பை கருதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து கிறிஸ்தவ மக்களுக்கும், கிறிஸ்தவ மதத்தலங்களுக்கும் எதிராக சுமார் 190 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பல்வேறு தரப்பிலிருந்து அவருக்கெதிராக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. சட்டத்தரணியின் இந்த கருத்துகள் ஆளும் தரப்பிடையே சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், சட்டத்தரணி டயஸ் திடீரென நாட்டை விட்டு வெளியேறுவதற்கான காரணம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலுடன் தொடர்புடையதாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1115

Search for people, places and things — Nagendram Home

**தேனுகா**




**புவிதரன்**




**டர்ஷன்**





**புனிதா**




**ஜனனி**




**சாருஜா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என்னுடன் இருக்கும் வரை அரசனென்று கூறியவர்கள் இன்று குற்றம் சாட்டுகின்றனர்'

## மகிந்த ராஜபக்ஷ மனவேதனை

(கொழும்பு)

என்னை இன்று குற்றம் கூறும் நபர்கள் அன்று எனது அமைச்சரவையில் இருந்தவர்கள். என்னால் ஏதேனும் குற்றம் இடம்பெற்றிருப்பின் அதற்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அன்று என்னுடன் இருக்கும் வரையில் என்னை அரசன் என கூறியவர்கள் இன்று என்னை குற்றவாளி என கூறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. குற்றங்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னுடன் இருந்த அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுகொள்ள வேண்டும்எனவும் வலியுறுத்தினார்.



குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் இன்று அதிகமாக தாக்கப்படுவதும், தண்டிக்கப்படுவதும் இந்த நாட்டின் தேரர்களும், இராணுவ வீரர்களுமேயாவர். இராணுவத்தினரை குற்றவாளிகள் என்ற ரீதியில் பார்ப்பதுடன் அதிகமாக தண்டிக்கப்பட்டும் வருகின்றனர்.

மறுபுறம் நாட்டில் தேரர்கள் இனவாதம் பரப்புவதாக கூறி தண்டிக்கப்பட்டு வருகின்றனர். அதேபோல் மிகவும் சூட்சுமமாக நாட்டில் இனவாதமும் மதவாதமும் பரப்பப்பட்டு வருகின்றது. பௌத்த சிங்கள மக்களுக்கும் மதத்திற்கும் எதிராக-பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இனவாதமும் பரப்பப்பட்டு வருகின்றது. இந்த செயற்பாடுகள் காரணமாக நாம் வெற்றிகொண்ட நாடு மீண்டும்பறிபோகும்நிலைமை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். அரச அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் மோசமாக தாக்குதல் நடத்திய வரலாறு இதற்கு முன்னர் எப்போதும் இருந்ததில்லை.

இந்த அரசாங்கமே மிகவும் கொடூரமான வகையில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. அப்பாவிகளுக்கு இவ்வாறு மோசமான வகையில் தாக்குதல் நடத்தப்படுகின்றது. இதற்கு கட்டளை பிறப்பித்தது யார்? யாருடைய அதிகாரத்தில் இந்த சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன?

அன்று எமது ஆட்சியில் இவ்வாறு நடந்தால் அல்லது நடைபெற்ற குற்றங்கள் அனைத்திற்கும் மகிந்த ராஜபக்ஷவே காரணம் என எனது பெயரை குறிப்பிட்டனர். இன்று யாரை குற்றம் சுமத்துவது.

நிறைவேற்று அதிகாரம் இன்று அனைவரின் மூலமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரணில் -மைத்திரி கூட்டணியினால் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முடியாது என்பது அப்போதே எமக்கு தெரியும். இந்த இருவரின் கூட்டணி திருமணம் பொருத்தமற்றது. இவர்களால்நாட்டை கொண்டு செல்ல முடியாது என ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்தேன். அரசாங்கம் செய்யும் தவறுகளை ஊடகங்கள் தெரிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஊடக அடக்குமுறை மிகவும் மோசமாக இடம்பெற்று வருகின்றது.

நாட்டின் நிலைமையை மக்கள் இன்று நன்றாக உணர்ந்துள்ளனர். ஒரு தடவை விழுந்த குழியில் மீண்டும் ஒருமுறை விழ மக்கள் தயார் இல்லை. ஆகவே மாற்றம் ஒன்றை இன்று மக்கள் விரும்பும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் உண்மைகளை மறைத்து ஊடகங்களை அடக்கி ஆட்சியை கொண்டுசெல்ல முயற்சிக்கின்றது.

எனினும் மக்கள் போராட வேண்டும். நாம் மக்களுடன் எப்போதும் கைகோர்த்து போராட தயாராக உள்ளோம். இன்று எம்முடன் மக்கள் அனைவரும் கைகோர்த்து செயற்படுகின்றனர். எமது கூட்டத்தை கண்டால் அஞ்சும் நபர்களும் உள்ளனர். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளில் என்னை குற்றவாளி என பொய்யான கருத்துக்களை கூறி என்னை அவமதித்து வருகின்றது. என்னை இன்று குற்றம் கூறும் நபர்கள் அன்று எனது அமைச்சரவையில் இருந்தவர்கள்.

என்னால் ஏதேனும் குற்றம் இடம்பெற்று இருப்பின் அதற்கு அவர்களும் பொறுப்புக் கூற வேண்டும். அன்று என்னுடன் இருக்கும் வரையில் என்னை அரசன் என கூறியவர்கள் இன்று என்னை குற்றவாளி என கூறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. குற்றங்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னுடன் இருந்த அனைவரும் குற்றவாளிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனது ஆட்சியில் இந்த நாட்டை காட்டிக்கொடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் நான் முன்னெடுக்கவில்லை. இனியும் அவ்வாறான செயற்பாடுகளை நான் முன்னெடுக்க போவதும் இல்லை. அன்று எம்முடன் இருந்தவர்கள் சிலர் சலுகைகளுக்காக எம்மை விட்டுச் சென்றுள்ளனர். யார் எம்மை விட்டு சென்றாலும் மக்கள் என்றும் எம்முடன் இீருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லாட்சியை நாம் எதிர்பார்க்க முடியாது

## முன்னாள் எம்.பி. விசனம்

(கொழும்பு)

நல்லாட்சியை தொடர்ந்தும் எதிர்பார்க்க முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேன விஜேசிங்க தெரிவித்துள்ளார். மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகவும் ஊழல்களை ஒழிப்பதாகவும் வாக்குறுதி அளித்தே இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதாகவும் எனினும் அரசாங்கம் தற்போது அனைத்தையும் மறந்து விட்டு செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாது அரசியல் சாசனத் திருத்தங்களை செய்வதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணங்கியுள்ள நிலையில், நல்லாட்சியை எதிர்பார்க்க முடியாது என அவர் தெரிவித்தார்.

ஆறு மாத காலத்தில் செய்ய வேண்டிய பணிகளை 100 நாட்களில் செய்வதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)







*யாழ். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்றைய தினம் இரத்ததான முகாம் ஒன்று பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலையின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்ததான முகாமில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டு குருதி வழங்கினர்.*

*இவ் இரத்ததான முகாமில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.*

*(படங்கள்:- மகாலிங்கம்)*

# மறைந்தார் மாண்பு

அகில இலங்கை திரு முறை மன்ற அமைப்பா ளராக இருந்து 12.06.2017 அன்று அமரத்துவம் அடை ந்த அமரர் சின்னையா கிரு ஷ்ணமூர்த்தி அவர்களின் சைவ வாழ்வியல்உடன்கூடிய திருமுறைத் தொண்டு பற் றிய ஒரு நோக்கு.

சிறுவயதில் இருந்தே சைவப்பற்றாளராக வளர்ந்தவர் சின்னையா கிருஷ்ணமூர்த்தி. ஆரம்பக் கல்வியை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் பயின்றார். பிட்டுக்கு மண்சுமந்த (செம்மனச் செல்வி) கதையைக் கேட்டு சிவப்பரம் பொருளில் ஈடுபாடு கொண்டவர்.

1974 ஆம் ஆண்டு இந்து சாதன துணையாசிரியர் கா. இரகுநாதன் அவர்களுடன் நீராவியடி -ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருகே உள்ள திருக்குளத்தருகே திருமுறை மன்ற அமைப்புப் பற்றி ஆலோசித்து பின் இந்து சாதன பிரதம ஆசிரியர் சாமி முருகேசு மயில்வாகனம் அவர்களின் ஆலோசனையின் பேரில் 1976 ஆம் ஆண்டு இம் மன்றம் ஆரம்பிக்கப் பட்டது. மில்க்வைற் சோப் தொழில் அதிபர் கந்தையா கனகராசா அவர்களால் நா யன்மார் நால்வரின் திருவுரு வம் பொறிக்கப்பட்ட கொடிச் சீலை அன்பளிப்பாக வழங்கப்பெற நல்லைக் கந்தன்திருவீதியில் 13.04.1976 அன்று திருமுறை ஓதலுடன் ஆரம் பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப அமைப்பாளர் அமரர் சின்னையா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

### இம்மன்றத்தின் நோக்கம்

திருமுறை பண்ணிசை வையப் பாரெல்லாம் பரவ வழி செய்தல்



பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேவாரப் பண்ணிசையை ஊக்குவித்தார். திருமுறை பெருமையைக் பரப் புதிய ஆலயங்கள் தோறும் பஞ்சபுராணம் ஓதும் முறையை சீரும் சிறப்புமாக இடம்பெற உதவுதல், மஹோற்சவ காலங்களில் அமரர் ஓதுவாராக பணிபுரிந்து திருமுறைக்கு பெருமை சேர்த்தார்.

மாதாந்த பூரணை தினங்களில் அகத்தியர் தேவாரத் திரட்டு மன்ற உநிப்பினர்கள் மற்றும் ஆர்வலர்களின் உதவியுடன் முற்றோதல் செய்து பன்னிரு திருமுறைப்பாராயணம் இடம்பெறவும் செய் தவர்.

வைகாசி ஆடி மாத பூரணை தினங்களில் திருமுறைக்கு விழா எடுப்பித்து சிறப்பித்தவர். பல ஆலயங்களுக்கும் திருவாவடு துறை ஆதீனம் வழங்கிய நால்வர் திருவுருவங்களை எழுந்தருளச்செய்து மாதம் ஒருமுறை என்ற ஒழுங்கில் ஓதும் நியமத்தை ஏற்படுத்தி செயற்பட்டவர்.

தற்போது சிவதொண்டன் நிலையத்தில் நால்வர் திருவுருவம்எழுந்தருளப்பெற்று மாதம் ஒருமுறை என்ற ஒழுங்கில் மூன்றாம் திருமுறை ஓதல் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்றையகாலத்தில்இளைஞர்கள் சைவப்பணியில் ஈடுபாடு கொண்டு தமிழ்மொழியில் பெரும்சொத்துதிருமுறை செம்மொழியாம்தமிழ்மொழியை திருமுறைப் பாடல்கள் வாயிலாக பாடிப் பரவி பணி செய்து நல்லோர்சமுதாயப்புரட்சிசெய்த நாயன்மார் போல நாமும் முன்வரவேண்டும் என்பதே அமரரின் விருப்ப மாகும்.

**செ.பாலச்சந்திரன்**
**அகில இலங்கை திருமுறை மன்றச் செயலாளர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 15 வருடங்களுக்கு நல்லாட்சி நீடிக்கும்

## அமைச்சர் ரவி நம்பிக்கை

நல்லாட்சி அரசாங்கத்தில் உச்சக்கட்ட ஜனநாயக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே தற்போதைய அரசாங்கம் எதிர்வரும் 15 வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் என வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எம்மால் செலுத்த முடியாத அளவு கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் நாம் கடன்களை செலுத்திக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்ற வகையிலான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

மக்களின் வாக்குகளால் வரமுடியாத சில அரசியல்வாதிகள் இன்று ஆர்ப்பாட்டங்களை தூண்டி வருகின்றனர். இதனால் காந்தியைப் போல தற்காலத்தில் அகிம்சையை கடைப்பிடிக்க முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எமது நாட்டிற்கு ஜீ.எஸ்.பீ. வரிச்சலுகை கிடைத்துள்ளது. அதனையடுத்து முதலீட்டாளர்களின் வருகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து பல முதலீட்டாளர்கள் வருகின்றார்கள்.

ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் பல கிட்டியுள்ளன. அதேபோல் வெளிநாடுகளுடன் நாம் தொடர்பு கொள்கின்ற போது எமது நாட்டின் மனித உரிமைகள் செயற்பாடுகள் தொடர்பில் பேச வேண்டியிருந்தது. அதனை அமைச்சர் மங்கள சமரவீர சரியாக செய்துள்ளார்.

அதற்கு அடுத்தபடியாக இராஜந்திர வணிக முறையினூடாகவே இலங்கையை உலக நாடுகளுடன் இணைக்க முடியும். தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே எமது வணிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரங்களை வலுப்படுத்துகின்றோம்.

மத்திய கிழக்கு நாடுகளில் தோன்றியுள்ள அசாதாரண நிலைமையின் காரணமாக அங்கு பணி புரியும் இலங்கையருக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்பதை தற்போது உறுதியாக கூற முடியும். அது தொடர்பில் அந்நாட்டிலுள்ள வெளிவிவகார அமைச்சர்களிடத்தில் பேசி இலங்கையர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளோம்.

மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வாறான நிலைமை தோன்றுவது சகஜம். இருப்பினும் அரசாங்கம் இலங்கையரை பாதுகாப்பதில் கவனமாக இருப்பதோடு மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவுகளையும் நாம் வலுவாக பேணுவோம்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எம்மால் செலுத்த முடியாத அளவு கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் நாம் கடன்களையும் செலுத்திக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்ற வகையிலான திட்டங்களையே தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

அதற்காகவே இன்று உலக நாடுகளுடன் கைகோர்த்துக் கொண்டு பயணிக்கின்றோம். அதனால் தற்போது உள்நாட்டு அபிவிருத்தி 12 இலிருந்து 16 வீதமாக அதிகரித்துள்ளது. இவை புதிய வரிகளால் மாத்திரம் வரவில்லை. கடந்த காலங்களில் சட்டவிரோதமாக நாட்டிற்கு வெளியில் பணம் சென்றது. தற்போது அந்த நிலையை மாற்றியமைத்துள்ளோம். எதிர்காலத்தில் வரியும் குறைக்கப்படும்.

தற்போது முக்கிய வரிகள் நடைமுறைக்கு வருவதில்லை என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக மாளிகை வரி ஆகியவை இன்றும் நடைமுறைக்கு வராமல் இருப்பதற்கு காரணம் என்னவென்பதே பிரச்சினையாக உள்ளது. இருப்பினும் மேற்படி வரிகளுக்கான ஆவணங்களை தயாரிக்கும் பணிகள் 100 வீதம் முழுமையாக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது வரையில் அது தொடர்பில் அரசாங்கத்திற்கு பதில் வழங்காமலேயே இருக்கின்றது.


அரசாங்கத்தை நடத்திச் செல்வதில் தற்போது எந்த பிரச்சினையும் இல்லை. அரசாங்கம் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் அரசாங்கத்திற்கு எந்த பிரச்சினையும் இல்லை. அவ்வாறிருந்தும் ஆர்ப்பாட்டம் செய்கின்றவர்களுக்கும் இன்று சுதந்திரம் உள்ளது.

எவ்வாறாயினும் இன்று பல்கலைக்கழக நிர்வாகங்களும் கூட ஆர்ப்பாட்டங்களை நிறுத்த வேண்டும் என்றே கூறுகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களினால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி போகின்றது.

எனவே அரசாங்கம் என்றும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளை அனுமதிக்காது. அதனால் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை மறுபுறத்தில் ஜனநாயக சுதந்திரத்தையும் அதிகமாக வழங்கியுள்ள அரசாங்கம் ஆட்சியில் இன்னும் 15 வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கு முதல்வர் நிதியத்திற்கு திரட்டப்பட்ட நிதி தொடர்பில் உண்மைக்குப் புறம்பான செய்திகள்

## கனேடிய தமிழர் சமூக அமையம் மறுப்பு



ஊடகங்கள்,. இணையத்தளங்களில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனது கனடா வருகையின்போது முதல்வர் நிதியத்திற்காகத் திரட்டப்பட்ட நிதி தொடர்பாக உண்மைக்குப் புறம்பான செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரது கனடா வருகையை பல அமைப்புகளுடனும் சேர்ந்து முன்னெடுத்தவர்கள் என்கின்ற வகையிலும், பிரசுரிக்கப்பட்ட செய்தியில் கனேடியத் தமிழர் சமூக அமையத்தினுடைய பெயர் குறிப்பிட்டதன் அடிப்படையிலும் இச் செய்தி தொடர்பான உண்மை நிலையை மக்கள் முன்வைக்க வேண்டியது எமது கடமையாகும்.

கனடாவுக்கான முதலமைச்சர் வருகையின்போது நடத்தப்பட்ட முதல்வர் உதவித் திட்டத்திற்கான நிதி சேர் நிகழ்வின் கணக்கறிக்கையையும் அதனுடன் எமது ஊடக அறிக்கையையும் மே மாதம் 16ஆம் திகதி 2017இல் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருந்தோம். இக் கணக்கறிக்கையில் கையிருப்பிலுள்ள பணம் மற்றும் வர வேண்டிய தொகை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பணம் இதுவரையிலும் யாரிடமும் கையளிக்கப்படவில்லை. ஏற்கனவே பேசப்பட்டதன்படி முதல்வரது உதவித்திட்ட அமைப்பில் கனேடிய சட்டதிட்டங்களுக்கமையவும் மற்றும் நல்லாட்சிக்கான சில நிர்வாக நடைமுறைகளும் சீரமைக்க வேண்டியமையால் இப் பணத்தினை நாம் இன்னமும் அனுப்பி வைக்கவில்லை. அவ்விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக இப்பணம் முதல்வரது உதவித் திட்ட அமைப்புக்கு அனுப்பி வைக்கப்படும் என கனேடிய தமிழர் சமூக அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-3)






இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கே.நிரஞ்சன் தலைமையில் நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பயிற்சி நெறியில் சுமார் இருபது தொழில் துறைகளில் பயிற்சிகளை பூர்த்தி செய்த 632 தொழில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ரெஜினோலட்கூரே தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் லயனல் பின்றோ, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சுகுணவதி தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொண்டு தொழிற்பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (இ-9)

# பௌத்த மதம் ஒரு இனத்திற்கு உரியதல்ல

பௌத்த பிக்குமார் சிலர் சமூக, கலாசார மனநிலையை அடிப்படையாகக் கொண்டு சிங்கள பௌத்த மதம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அடிப்படையான பௌத்த சமயத்தில் எந்த இடத்திலும் பௌத்த தர்மம் ஒரு நாட்டுக்கோ, இனத்திற்கோ, ஜாதிக்கோ உரியது என வரையறுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்த ஒரு சமூகமாக இருந்தாலும் மொழி மற்றும் கலாசார அடிப்படையில் விசேட அடையாளங்கள் உள்ளன. அந்த சமூக அடையாளத்திற்காக பேசுவோர், குரல் கொடுப்போர் பலர் உள்ளனர்.

இவர்களில் சிங்கள மொழி பேசும் மற்றும் அந்த மொழியுடன் சம்பந்தப்பட்ட கலாசார உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பௌத்த பிக்குமார் இருப்பதைக் காணமுடிகிறது.

எனினும் மனிதர்களை இன, ஜாதி, குல ரீதியாக பிரிக்கக்கூடாது என பௌத்த தர்மம் தெளிவாக வலியுறுத்தியுள்ளது.

இதனால், பௌத்த தர்மத்தை இனவாத போதனையாக கருதுவது பௌத்த போதனைகளுக்கு நிந்திப்பதாகும் எனவும் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குளிரில் நின்றால் பரிசு

ஒரு நாள் இரவு நேரத்தில் அக்பரும் பீர்பாலும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். குளிர் அதிக மாக இருந்ததால் சால்வையை இறுக்கமாக இருவரும் போர்த் திக்கொண்டிருந்தனர். அப்படியும் குளிர் அக்பரை மிகவும் வாட்டி யெடுத்தது.

அக்பர் பீர்பாலை பார்த்து "பீர் பால் இந்த குளிரின் கொடு மையை பார்த்தீரா... எதிரிகளுக்கு அஞ்சாத நெஞ்சம் இருந்தும் இந்த குளிருக்கு அஞ்சாமல் இருக்க முடியவில்லையே! இந்த குளிரை பொருட்படுத்தாமல், யமுனை ஆற் றில் ஒரு இரவு முழுக்க, கழுத்தளவு நீரில் யாராலும் நிற்க இயலுமோ! அவ்வாறு நின்றால், அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கலாம்" என்றார்.

"அரசே, சிங்கத்தின் முடியைக் கூட கொண்டு வந்துவிடலாம். ஆனால் நடுங்கும் குளிரில் இரவு முழுவது ஆற்றில்நிற்பது என்பது சாதா ரண காரியமா?" என்றார் பீர்பால்.

"யமுனை ஆற்றில் குளிரில் நிற் பதற்கு எந்தவித திறமையும் தேவை யில்லை. மன உறுதி இருந்தாலே போதும்! நாடு முழுவதும் இந்தச் செய்தியை அறிவிக்க சொல்லுங் கள்! பணத்தின் மீது ஆசைப்பட்டு நிறையப் பேர் பங்கு பெற வருவார் கள். அதில் யார் வெற்றி பெறு வார் கள் எனப்பார்ப்போம்" என்றார் அக்பர்.

அரசரின் ஆணை நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளே, ஒரு இளைஞன் அரசரிடம் வந்து "அரசே, யமுனை நதியில் கழுத்த ளவு நீரில் இரவு முழுவதும் நிற்ப தற்கு நான் தயாராக இருக்கிறேன்" என்றான்.

அக்பர் அந்த இளைஞனை வியப்பாகப் பார்த்து "இன்று இரவு போட்டிக்கு தயாராகு" என்றார். இளைஞனும் தயாரானான். நடுங் கும் குளிரில் நிற்பது சதாரண விடயமில்லையே என நினைத்த அக்பர், அந்த இளைஞனை கண் காணிப்பதற்கு இரண்டு காவலாளி களை நியமித்தார்.

யமுனை ஆற்றில் வெற்று உட ம்புடன் இறங்கினான் இளைஞன். கழுத்தளவு வரை நீர் உள்ள இடத்தில் நின்று கொண்டான். உடல் மிகவும் நடுங்கியது, குளிர் வாட்டியது. அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆனாலும் பரிசாக கிடைக்கப்போகும் ஆயிரம் பொற்காசுகளை எண்ணிப் பார்த் தான். புதுத் தெம்பு வரவே, இரவு முழுவதும் கண் விழித்து நின்று கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. வெயில் மேனி யில் பட உடல் சீரான நிலைக்கு வந்தது. ஆயிரம் பொற்காசுகளை பெறப்போகிறோம் என்ற மகிழ்ச்சி யில் ஆற்றை விட்டு மேலே வந்தான். அவனை காவலாளிகள் மன்னரி டம் அழைத்துச் சென்று இரவு முழு வதும் இளைஞன் கழுத்தளவு நீரு க்குள் நின்றதை கூறினார்கள்.

அக்பருக்கோ மிகவும் வியப் பாக இருந்தது. "இளைஞனே உன் மன உறுதியைப் பாராட்டுகிறேன்! அந்த இரவில், கடும்குளிரில் நீருக்குள் எப்படி இருந்தாய்? அப்படி நிற்கும்போது உனக்கு எந்த வகை யிலும், ஏதாவது துணையாக இருந் ததா? என்றார் அக்பர். அந்த இளை ஞனும் அப்பாவியாய் "அரசே அர ண்மனையின் மேல் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த சிறிய விளக் கின் ஒளியை பார்த்துக்கொண்டே இரவுப்பொழுதை கழித்தேன்" என்றான்.

"இளைஞனே அதானே பார்த் தேன். நடுங்கும் குளிரில் தண்ணீ ருக்குள் எப்படி உன்னால் இருக்க முடிந்தது என்று... இப்பொழுது புரி கிறது! உன் குளிரைப் போக்க் அர ண்மனையிலிருந்து வீசிய விளக் கின் ஒளி உனக்கு உதவி செய்தி ருக்கிறது. அந்த சூட்டில் தான் இரவு முழுவதும் நின்றிருக்கிறாய். எனவே உனக்கு ஆயிரம் பொற்காசுகள் கிடையாது" என்றார்.

பரிசுத்தொகை கிடைக்கவில்லை என்றதும் அந்த இளைஞன் மிக வும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென் றான். பீர்பால் அவனைக் கண்டு என்னவென்று விசாரிக்க... இளை ஞனும் பீர்பாலிடம் எல்லாவற்றை



யும் சொன்னான். பீர்பால் அவனுக்கு ஆறுதல் கூறி பரிசுத் தொகை கிடைக்க உதவி செய்வதாக உறு தியளித்தார்.

சில நாட்களுக்கு பிறகு, அக்பர் வேட்டையாட புறப்பட்டுக்கொண்டி ருந்தார். பீர்பாலை தம்முடன் அழைத்துச் செல்ல எண்ணிய அக் பர் காவலாளியை கூப்பிட்டு பீர்பால் வீட்டுக்குச் சென்று அழைத்து வரச் சொன்னார்.

பீர்பால் தன்னைத் தேடி வந்த காவலாளியிடம் தான் சமையல் செய்து கொண்டிருப்பதையும் சாப்பிட்டு விட்டு வருவதாகவும் கூறினார். நீண்டநேரம் பீர்பாலுக் காக அக்பர் காத்திருந்தார். பீர்பால் வரவில்லை. மிகவும் கோபமடை ந்த அரசர் பீர்பாலின் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு வரலாம் எனப்புறப்பட்டார். பீர்பால் வீட்டில் ஒரு பாத்திரத்தில் அரிசியை போட்டு தண்ணீர் ஊற்றி வைத்திருந்தார். பாத்திரத்திலிருந்து பத்தடி தூரம் தள்ளி அடுப்பை வைத்திருந்தார். அடுப்பில் விறகுகள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. இதை கண்ட அக்பருக்கு ஒன்றும் புரிய வில்லை. பீர்பாலிடமே கேட்டார்.

"பீர்பால் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" அக்பர். "அரசே சமையல் செய்து கொண்டிருக் கிறேன்" பீர்பால். "உமக்கு என்ன மூளை குழம்பி விட்டதா? பாத்திரம் ஒரு பக்கம் இருக்கிறது. அடுப்பு ஒரு பக்கம் இருக்கிறது. அதில் எப்படி சோறு வேகும்?" என்றார் அக்பர் கோபத்துடன்.

"அரசே நிச்சயம் சோறு வேகும். யமுனை ஆற்றில் தண்ணீரில் இருந்தவனுக்கு அரண்மனையில் இருந்த விளக்கின் வெளிச்சம் சூட்டை தந்திருக்கும் போது மிகவும் பக்கத்தில் இருக்கிற அடுப்பில் ஏற் படும் சூடு அரிசி பாத்திரத்தில் பட் டும் சோறு வெந்து விடாமல்போகுமா? என்றார் பீர்பால்.

மிகவும் நாசுக்காக தமக்கு புரிய வைத்த பீர்பாலை பாராட்டி அந்த இளைஞனை வரவழைத்து முன்பு கூறியபடியே ஆயிரம் பொற்காசுகளை கொடுத்தார்.




- 1759 - கியூபெக் மீதான பிரித்தானியாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமானது.
- 1806 -பிரித்தானியப் படையினர் புவனெசு ஐரிசைக் கைப்பற்றினர்.
- 1898 - உலகை சுற்றும் முதலாவது பயணத்தை நோவா ஸ்கோசியாவைச் சேர்ந்த யோசுவா சுலோக்கம் வெற்றிகரமாக முடித்தார்.
- 1899- ஏ. இ. ஜே. காலின்ஸ் ஆட்டமிழக்காமல் 628 ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார். இச் சாதனை 2016 இல் பிரணவ் தனவேத் என்ற இந்திய மாணவனால் முறியடிக்கப்பட் டது.
- 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1977 - சீபூத்தீ பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979 - முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- 2014 - ஆந்திரப் பிரதேசம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கெயில் இந்தியா நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் வெடித்ததில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1789 - டானியல் புவர், இலங்கையில் கல்விச்சா லைகளை நிறுவிய அமெரிக்கக் கிறித்தவ மதகுரு (இ. 1855)
- 1838-பங்கிம் சந்திர சட்டர்ஜி, இந்திய ஊடக வியலாளர், கவிஞர் (இ. 1894)
- 1899 - சி. கணபதிப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1986)
- 1922 -அகிலன், தமிழக எழுத்தாளர் (இ. 1988)
- 1927 - டொமினிக் ஜீவா, ஈழத்து எழுத்தாளர், இதழாசிரியர்
- 1939 - ராகுல் தேவ் பர்மன், இந்திய இசையமை ப்பாளர் (இ. 1994)
- 1943 - உ. இராதாகிருஷ்ணன், ஈழத்து வயலின் இசைக் கலைஞர் (இ. 2015)
- 1958 - மரியா சூபர், அமெரிக்க வானியலாளர்
- 1962 - சுனந்தா புஷ்கர், இந்திய-கனேடிய பெண் தொழிலதிபர் (இ. 2014)
- 1963 - சுசில் குமார் சிங், இந்திய அரசியல்வாதி
- 1964 - பி. டி உஷா, கேரள தடகள விளையாட்டாளர்
- 1973 -அஜித் குமார், இலங்கை அரசியல்வாதி
- 1975 - தோபி மக்குயர், அமெரிக்க நடிகர்

இறப்புகள்

- 1839 - ரஞ்சித் சிங், சீக்கிய பேரரசை நிறுவியவர் (பி. 1780)
- 1844 - இரண்டாம் யோசப்பு இசுமித்து, பிற்காலப் புனிதர்களின் இயேசு கிறித்து சபையை நிறுவிய அமெரிக்கர் (பி. 1805)
- 1988 - ஆர். முத்துசாமி, ஈழத்து இசைய மைப்பாளர், பாடகர் (பி. 1926)
- 1998 - நிகில் சக்கரவர்த்தி, இந்திய இதழியலாளர் ?(பி. 1913)
- 2006 - கா. செ. நடராசா, ஈழத்து எழுத்தாளர், கவிஞர் (பி. 1930)
- 2007 - டி. எம். தியாகராஜன், கருநாடக இசைக் கலைஞர் (பி: 1923)
- 2008 - சாம் மானேக்சா, இந்திய இந்திய இராணுவத் தளபதி (பி. 1914)
- 2009 -இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (பி. 1935)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (சீபூத்தீ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 120 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 400 | 400 | 250 |
| தக்காளி | 140 | 150 | 140 | 160 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 140 | 120 | 150 | 200 | 160 | 160 |
| கரட் | 230 | 300 | 250 | 300 | 400 | 300 |
| பூசணி | 100 | 80 | 80 | 80 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 60 | 50 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 320 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 120 | 140 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 50 | — | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 140 | 100 | 120 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | 150 | 320 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 260 | 180 | 300 | 200 | 250 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | — | 120 | 140 |
| கீரை-1பிடி | 30 | 30 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 60 | 55 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | — | 280 | 250 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 200 | 300 | 280 | 160 |
| முள்ளங்கி | 80 | 90 | 50 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 10 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | 100 | — | — | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞனே! நல்லதையே நினை; நல்லதற்காகவே உழைத்திடு; நல்லதையே எதிர்நோக்கு.
~ விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் இளைஞர்களே நீங்கள் விழிப்பாக இருங்கள்

அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! இந்த உலகில் புதுமைகளும் சாதனைகளும் புரியக் கூடியவர்கள் நீங்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதனால்தான் சுவாமி விவேகானந்தர் முதல், விஞ்ஞானி அப்துல் கலாம் வரை இளைஞர்களை நோக்கி அறைகூவல் விடுத்தனர்.

இளைஞர்கள் நேர்மையை விரும்புபவர்கள். நீதியை நிலைநாட்ட பாடுபடுபவர்கள். அவர்கள் ஒருபோதும் அநீதியைக் கண்டு அமைதி கொள்பவர்கள் அல்லர்.

இந்த அடிப்படையில்தான் எங்கள் நாட்டிலும் இளைஞர்கள் உரிமைக்காகப் போராடினர்.

ஆனால் காலசூழ்நிலைகளும் தமிழ் மக்களுக்கு இந்த உலகின் எந்தப் பகுதியிலும் ஆட்சி அதிகாரம் இல்லாததாலும் எங்கள் இளைஞர்களின் தியாகம் விளைச்சல் அற்றுப் போயிற்று.

இதன்விளைவு இன்றுவரை எங்கள் தாய்மார் அழுகண்ணீருடன் வாழும் பரிதாப சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்போது தமிழினம் படும் துன்ப துயரங்கள் எத்தன்மையது என்பதை நாம் கூறி யாரும் தெரிய வேண்டியதில்லை. இன்றிருக்கக் கூடிய எங்கள் சூழ்நிலை மிகவும் ஆபத்தானது.

எங்கள் அரசியல் தலைமைகளோ எங்களை ஏமாற்றத் தலைப்பட்டுள்ளனர். தமிழினத்துக்காக யார் கதைத்தாலும் அவர்களைப் பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்பதில் சிலர் உறுதியாக இருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழினத்துக்காக கதைப்பவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கும் வீணான தொந்தரவுகளுக்கும் ஆளாகின்றனர்.

நாம் ஒன்றை மிகவும் நிதானமாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழினம் சார்ந்து கதைப்பவர்களை பதவியில் இருந்து இறக்க வேண்டும் என விடாப்பிடியாக நிற்பவர்கள் யார்? இவர்களின் நோக்கம் என்ன? உண்மையிலேயே இவர்களிடம் தமிழ் இனப்பற்று உள்ளதா? அல்லது தங்கள் சுய இலக்கை அடைய தமிழினத்தை தமக்குச் சாதகமாக்கப் பயன்படுத்துகிறார்களா?

உள்ளார்ந்தமாக இவர்கள் தமிழினம் சார்ந்தவர்கள் என்றால், அவர்களை நாம் ஏற்போம். இல்லையேல் உரிய பாடம் புகட்டுவோம்.

இதைச் செய்யத் தவறினால் மண் மீட்புக்காக போரிட்ட ஓர் இனம் தன் சொந்த மண்ணிலேயே வாழ முடியாமல் போனது என்ற வரலாறு மட்டுமே எஞ்சும்.

அன்புக்குரிய இளைஞர்களே! எங்கள் அரசியல்வாதிகள் வேறு யாருமல்ல; அவர்கள் நம்மவர்கள். அவர்களை நாமே பாராளுமன்றத்துக்கும் வடக்கு மாகாண சபைக்கும் அனுப்பி வைத்தோம்.

இவர்கள் பதவியைப் பெற்ற பின்பு தாம் எதுவும் கதைக்கலாம் என நினைப்பது மகா தவறு.

சிலர் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த பின்னர் தமிழினத்தை விமர்சிக்கின்றனர்.

மக்களின் ஆதரவுப் பலத்தை அறியாமல் அறிக்கை விடுகின்றனர். இவர்கள் தொடர்பில் நீங்கள் விழிப்பாக இருங்கள்.

அவர்களிடம் கேள்வி கேளுங்கள். தமிழினத்துக்காக நீங்கள் செய்தது என்ன? என்பதை எடுத்துரைக்கச் சொல்லுங்கள்.

எந்தப் பக்கச்சார்பும் இன்றி தமிழினத்துக்காக உங்கள் ஜனநாயகக் குரலை உரக்க எழுப்புங்கள். இது நிச்சயம் தமிழ் அரசியல் தலைமையை நெறிப்படுத்தும். இல்லை என்றால் தூக்கி வீசும். இதைச் செய்வது இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது.

# தமிழ்ப் பண்பாட்டை நாம் இழந்துவிடக் கூடாது

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் பண்பாட்டை தமிழர்களாகிய நாம் இழந்து விடக்கூடாது, எமது பண்பாட்டை, மொழியை, கலாசாரத்தை நாம் இழப்போமாக விருந்தால் தமிழர்களாக இந்த மண்ணில் நாம் வாழ முடியாது என யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழா நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் மாலை நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்றன.

இங்கு அவர் தனது தலைமை உரையில்மேலும கூறுகையில்,

தமிழை வளர்ப்பதற்காக கம்பன் கழகம் ஆற்றி வருகின்ற பணி மிகப் பெரியது, பெறுமதியானது. கம்பன் கழகத்தை இயக்கிச் செல்கின்ற கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களது அரும்பெரும் பணி காலத்தால் போற்றப் பட்டு நிலைத்து நீடித்திருக்கக் கூடியது.

இப்பணி எமது மொழியை, எமது பண்பாட்டை, எமது கலாசாரத்தை பேணுவதற்கு எமது வரலாற்றை வெளிப்படுத்தி எமது தமிழ் இனத்தின் நிலைத் திருப்புக்கு மிக முக்கியமானதாகும்.

மதிப்புக்குரிய கம்பவாரிதி அவர்கள் எமது நாட்டிலும் நாடு கடந்தும் தமிழ் வளர்ப்பதில் அரும்பணியாற்றி வருகின்றார். அவரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்களும் அவர் வழி தொடர்கின்றார்கள்.

எமது தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டிய இக்கட்டான நிலையில் நாம் இன்று உள்ளோம்.

ஈழம் என்ற சொல்லைக் கூட விரோதமாகப் பார்க்கின்ற காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது மொழியை, பண்பாட்டை சிதைத்தழித்து எமது இனத்தை அழிப்பதற்கான பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதனையெல்லாம் எதிர் கொண்டுதான் எமது தமிழ் மொழியை, தமிழ் பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டியவர்களாக நாம் காணப்படுகின்றோம்.

பலசவால்களுக்கு மத்தியிலும் எமது தமிழ் பண்பாட்டை, தமிழ் மொழியை கட்டிக்காத்து வளர்ப்பதில் கம்பன் கழகம் காலக் கடமையேற்று ஆற்றி வருகின்ற இப்பணி மிகவும் பெறுமதியான மிக முக்கியமான தொன்றாகும். இப்பணி தொடர என்றென்றும் நாம் துணையிருப்போம் என்றார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், இலங்கை, இந்தியா நாட்டைச் சேர்ந்த தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், கம்பன் கழக உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வுகளில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் வரும் கதாபாத்திரங்கள் மேடையில் தோன்றி தற்கால வாழ்வியல முறை, அரசியல் ஆட்சி முறை போன்றவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்ட நாடகமும் மிகவும் சிறந்த முறையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## யாழ்.பல்கலை.விளையாட்டு விஞ்ஞான அலகின் சர்வதேச யோகா தின நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சர்வதேச யோகா தின நிகழ்வு நாளை 28ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும்.

இந் நிகழ்வின் முதலாவது அமர்வு காலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் மண்டபத்திலும் இரண்டாவது அமர்வு காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் இடம் பெறும்.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சபா ஆனந்த் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தலைவர், பேராசிரியர் திருமதி.ரி.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## சனசமூக நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா

தையிட்டி கிழக்கு கலைநங்கை சனசமூகநிலையத்தை புதிதாக நிர்மாணிப்பதற் கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நிலையத்தின் தலைவர் செ.திருஞானம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு வலி.வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, வலி. வடக்கு பிரதேச சபை யின் செயலாளர் தையிட்டி கிழக்கு ஜே/247 கிராம உத்தியோகத்தர், தையிட்டி வடக்கு கிராம உத்தியோகத்தர், தையிட்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், செயலாளர், நலன்விரும்பிகள், சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள், கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச் சனசமூக நிலையம் 27 வருடங்களுக்கு பின்னர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-10)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

யாரிடம் கதைகட்டுகிறாய். அந்தப் பசுவின் பால் அடுத்த வேளை வராவிட்டால் நீ தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்று அரசி எச்சரித்து அனுப்பினாள்.

இடையர் தலைவன் அப்பசுவை இமை மூடாமல் கவனித்தான். மலைக்காட்டில் அப்பசு மந்தையை விட்டு விலகி ஒரு புற்றின் அருகே சென்று பால் சொரிவதைக் கண்டு மனம் பதைத்தான்.

கோப மிகுதியில் கோடரி ஒன்றைக் கொண்டு பசுவைத் தாக்க விரைந்து வந்தான். தனக்குப் பால் கொடுக்கும் பசுவுக்கு ஆபத்து என்பதை அறிந்த அச்சுதன் புற்றின் மேல் எழுந்து நின்றான்.

இடையர் தலைவன் எடுத்து வீசிய கோடரி பசுவை விடுத்து பரந்தாமன் தலையைத் தாக்கியது. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஆண், பெண் நட்சத்திரம் ஒன்றாக வந்தால்?**

ரோகினி, அத்தம், திருவோணம், திருவாதிரை, மகம், விசாகம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் தோஷம் இல்லை.

ஒரே நட்சத்திரமாக வரும் பொழுது பெண் நட்சத்திர பாதகமானது ஆண் நட்சத்திர பாதத்தை விட அடுத்த பாதகமாக இருப்பது உத்தமம். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு "ஏழையே இதை வாங்கிக் கொள்" என்று கூறாதே. அவனுக்குக் கொடுப்பதால் உனக்கு நீயே உதவி புரிய முடிந்ததெனக் கருதி அந்த ஏழை கொடுப்பவனே பேறு பெற்றவன் பெறுபவனல்ல.

❖ பெருமை கொள். தியாகமின்றிப் பெரும்பணிகள் எதையும் செய்ய இயலாது. பெரியோர் தாமே இவ்வுலகை படைப்பதற்காகத் தம்மையே தியாகம் செய்தனர். உனது சுக சாதனாங்களையும் உனது பெயரையும் புகழையும் மதிப்பையும் உனது வாழ்வையும் கீழே வைத்துவிடு. மக்களைச் சங்கிலிகளாகக் கொண்டு ஒரு பாலத்தை அமைத்திடுக. அதன்மீது கோடிக்கணக்கான மக்கள் நடந்து சென்று இப்பிறவிக்கடலைத் தாண்டட்டும்.

❖ நன்மையை நாடும் படைகளையெல்லாம் ஒருங்கிணைக்க வேண்டும். எந்தக் கொடியைப் பிடித்துச் செல்கின்றாய் என்பதைப் பொருளாகக் கொள்ளாதே. உனக்குக் கிடைக்கும் நிறம் பச்சையே நீலமோ சிவப்போ என்பதைப் பொருட்படுத்தாதே. எல்லா வண்ணங்களையும் ஒன்றாகக் குழைத்து அன்பின் [illegible] உண்டாக்கு. செயல்புரிவதே நமக்குரியது. பயன்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் இளவரசனாக முடிசூடியது குருநகர் கார்மேல் போய்ஸ் அணி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் அமரர்கள் சுப்ரமணியம் கௌசிகன்,இதயராஜ் ஞாபகார்த்தமாக நடைபெறும் வடக்கின் கிரிக்கெட்இளவரசன் யார் துடுப்பாட்ட சமரின் வடக்கின் இளவரசனாக முடிசூடியது குருநகர்கார்மேல்போய்ஸ் விளையாட்டுக்கழகம். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரீமுருகன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணியை 6 ஓவர் நிறைவில் 85/4 ஓட்டங்களை குவித்தது.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் 6 ஓவர் நிறைவில் 57/3 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 28 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது கோப்பாய் ஐக்கிய வி. கழகம்



அமரர் செல்லப்பா பொன னம்பலம் ஞாபகார்த்த வெற் றிக்கிண்ண துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் (24. 06.2017) அன்று நடை பெற்ற 2 வது மற்று மோர் அரையிறுதிப் போட்டி யில் எவரெஸ்ற் விளையாட் டுக்கழகத்தை வீழ்த்தி இறு திப்போட்டிக்கு தெரிவாகியது கோப்பாய் ஐக்கிய விளை யாட்டுக்கழகம். (க)

## அமரர் கந்தையா துரைராஜா — ஞாபகார்த்த கரப்பந்தாட்ட போட்டி

### துர்க்கா கிங்ஸ் வெற்றி





அரியாலை சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவு விழா வினை முன்னிட்டு அமரர் கந்தையா துரைராஜா ஞாப கார்த்தமாக மாவட்ட ரீதி யான கரப்பந்தாட்ட ஓவர் கேம் சுற்றுப்போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி யில் துர்கா கிங்ஸ் உடம் வரணியும் மோதியது. இதில் 2:0 என்ற ரீதியில் துர்க்கா கிங்ஸ் வெற்றியீட்டியது.

இரண்டாவது அரையி றுதியில் உதய சூரியன் அணி குணசேகர அணியினை 2:1 என்று வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் துர்க்கா கிங்ஸ் உதயசூரி யனை 2:1 என்ற ரீதியில் வெற்றியீட்டியது. (க)




29 ஆவது மாவட்ட மட்ட இளைஞர் கழக ஈட்டி எறிதல் போட் டியில் முத லாம் இடத்தை பெற்று தேசிய ரீதிக்கு தெரிவாகியுள்ள இமையாணன் மத்திய விளை யாட் டுக்கழக வீராங் கனை மிதுலா

## இன்றைய போட்டி

வடமராட்சி உதை பந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளை யாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந் தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளை யாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டி யில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோத வுள்ளது. (க)

## உதயதாரகை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

### பாரதி, கரணவாய் மத்தி வெற்றி





(யாழ்ப்பாணம்)

அமரர் கந்தசாமி ஆறு முகம் ஞாபகார்த்தமாக கற் கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 24.06.2017 அன்று நடை பெற்ற போட்டியில் முதலா வது ஆட்டத்தில் ஸ்ரீஅம்பாள் A விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் மோதி யது.

இப் போட்டியில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் 3.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரணவாய் மத் திய விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து ஸ்ரீஅம்பாள் B விளை யாட்டுக்கழகம் மோதியது.

இதில் கரணவாய்மத்தி விளையாட்டுக்கழகம் 7.0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## சென் ஜேம்ஸ்சை வீழ்த்தியது குருநகர் பாடும்மீன் வி. கழகம்



உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மின்னொளியிலான உதைபந்தாட்ட தொடரில் (24.06.2017) அன்று நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.பரபரப்பான இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.80 இலட்சம்...

டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று பகல் ராகம - பெசிலிகா வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காரொன்றில் வந்த கொள்ளையர்கள் வீதியை மறித்து வானின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அச்சுறுத்தி விட்டு பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்களோ உயிராபத்தோ ஏற்படவில்லை என தெரிவித்த பொலிஸார் கொள்ளையர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## தபால் சேவையாளர்...

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், மீண்டும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக தபால் சேவையாளர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. (செ-11)

## தூதுவர்கள்...

5ஆம் திகதிகளில் கலந்துரையாடல்களுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் கலந்துரையாடல்களுக்கு இலங்கைக்கான 63 வெளிநாட்டு தூதுவர்கள் கலந்து கொள்வார்கள்.

அதேவேளை தற்போதுள்ள தூதுவர்களுக்கான 7 வெற்றிடங்கள் விரைவில் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் நாட்டுக்குத் தேவையான புதிய வெளியுறவுக் கொள்கையும் தயாரிக்கப்படவுள்ளது என வெளிவிவகாரத் துறை அமைச்சர் ரவிகருணாநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார். (செ-11)

## சம்பந்தன் வழங்கிய...

படையினர் வசம் இருக்கின்ற காணிகளில ஒரு பகுதி விரைவில் விடுவிக்கப்படும் என்றும் ஏனைய 70 ஏக்கர் காணி தவணை அடிப்படையில் விடுவிக்கப்படும் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த மாதம் நேரடியாக இவ்விடத்துக்கு வந்து கூறினார். ஆனால், இதுவரையில் அதற்கான எந்தவொரு அறிகுறியும் தென்படவில்லை என்று நேற்று 118ஆவது நாளாகத் தமது போராட்டத்தைத் தொடர்ந்துமுன்னெடுத்துவரும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

எந்தவோர் அரசியல்வாதியாலும் அதிகாரியினாலும் திரும்பிப் பார்க்கப்படாத நிலையில், எங்களது போராட்டம் தொடர்கின்றது. எங்களின் நிலங்களுக்காக 118 நாட்களுக்கு மேலாக நாங்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றோம் என்றும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

கேப்பாப்பிலவு பகுதியில் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக்கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் எவ்விதத் தீர்வுகளுமின்றிய நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து கருத்துரைத்த போராட்டக்காரர்கள், 118 நாட்களாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இந்நிலையில் இங்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், காணிகள் விடுவிப்பது தொடர்பில் வாக்குறுதியளித்துச் சென்ற போதிலும் தற்போது வரை எந்தவொரு தீர்வுகளும் இன்றிய நிலையில் போராட்டம் தொடர்கிறது என விரக்தியுடன் தெரிவித்தனர். (செ-11)

## பிரிவினை இன்றி...

தானம் செய்திருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அபேதிஸ்ஸ தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பௌத்த மதகுருமார் என்ற ரீதியில் அரசியலமைப்பு ரீதியாகவோ, வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டோ இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்தால், அது பாரிய இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும்.

தமிழ், சிங்கள மக்கள் பல சகாப்தங்களாக ஒற்றுமையாக வாழ்ந்து வருபவர்கள்.

யாழ்.தேவி புகையிரதம் தடைசெய்யப்பட்டு எமக்கிடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் எம்மை பிரித்து வைத்ததன் ஊடாக சிங்களவர்கள், தமிழர்கள் என்பது இருவேறு இனங்கள் என நினைக்கும் நிலைமையை ஏற்படுத்தியிருந்தார்கள்.

அவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் என்ற நிலைப்பாடும் உருவாக்கப்பட்டிருந்தது.

இதனை முடிவுக்குக் கொண்டு வந்து, சகல இனங்களும் ஒற்றுமையாக நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும்.

வடக்கு, தெற்கு என்ற பிரிவினை இன்றி சகலரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இதனை உறுதிப்படுத்துவதற்கு பௌத்த மதகுருமார் என்ற ரீதியில் இரு தரப்பினருக்கும் நாம் ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார். (செ-11)

## தேவாலயங்கள்...

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் நேற்று வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவு ஒன்றில் பாரபட்சமற்ற முறையில் நடத்தப்படுதல் மற்றும் எல்லா இலங்கையர்களுக்கும் நம்பிக்கை சுதந்திரம் என்பன தேவை என்று தேசிய கிறிஸ்தவ இவாஞ்சலிக்கல் கூட்டமைப்புடன் தாம் பேச்சு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

தேவாலயங்கள் பலாத்காரமாக மூடப்படுதல் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் மூடுமாறு கோரும் 24 சம்பவங்கள், 2015ஆம் ஆண்டிலும் 25 சம்பவங்கள் 2016ஆம் ஆண்டிலும் 2017ஆம் ஆண்டில் இதுவரை 9 சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாக தேசிய கிறிஸ்தவ இவாஞ்சலிக்கல் கூட்டமைப்பின் பதிவுகள் கூறுகின்றன.

அதேவேளை, அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது, முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தூதுவர் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மன்னார் கடற்படுக்...

வளத்தைக் கொண்டு இலங்கையின் 60 ஆண்டுகளுக்குத் தேவையான சக்தி தேவை பூர்த்தி செய்ய முடியும்.

பெற்றோலிய இருப்பைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பாக, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழுவினால் விசாரிக்கப்பட்ட போது இந்த தகவல்கள் தெரிய வந்துள்ளன.

மன்னார் கடற்படுக்கையில் உள்ள எண்ணெய் வளத்தை தோண்டியெடுப்பதற்கு 59 மில்லியன் தொடக்கம் ஒரு பில்லியன் டொலர் வரையிலான செலவு ஏற்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னார் கடற்படுக்கையில், எண்ணெய் அகழ்வில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைக் கண்டறியும் முயற்சிகளில், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

## நல்லாட்சி அர...

வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை அபேகம வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் உணர்வுகள் அற்ற அரசாங்கமாகும். எனவே நாட்டின் தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொள்ளாமல் ஒத்திசைவு பட்டியலை நீக்கி சமஷ்டிக்கு வழி சமைக்கின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டில் இந்த உணர்வற்ற அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட அறிக்கைக்கு இணை அனுசரணை வழங்கியது.

அந்த அறிக்கையில் யுத்தகாலத்தில் இலங்கை இராணுவம் மனித உரிமை மீறல்களை செய்தது, காணாமல் போனோர் அலுவலகம் வேண்டும் போன்ற விடயங்களே குறிப்பிடப்பட்டுள்ளன என விமல் வீரவன்ச தெரிவித்தார். (செ-11)

## மகனைத் தேடிய...



கிராமத்தைச் சேர்ந்த துரைசிங்கம்-ஈஸ்வரி என்ற தயார் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது தனது மகனை தொலைத்து விட்டு அழுது புரண்டபடி பல இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்று வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ந்தும் பங்கு கொண்டு வந்துள்ளார். இந் நிலையில் கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது மகனின் முகத்தை பார்க்காமலே அவர் உயிரிழந்துள்ளார். மேற்படி சம்பவம் புதுக்குடியிருப்பு பிரதேச மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ள நிலையில்,

பிரதேச பிரதிநிதி ஒருவர் கூறுகையில்,

தமது பிள்ளைகளை, கணவன்மார்களை என உறவுகளை தொலைத்து விட்டு தேடியலையும் மக்களின் ஆயுள் முடிந்து போகும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குற்றங்களுக்கான ஆதாரங்களும் இல்லாமல் போகும் நிலைமையும் இதன்மூலம் ஏற்பட்டு உள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்.

தமது பிள்ளைகளை தேடியலைந்து வாழ்வியலை தொலைதத காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலைகள் மற்றும துன்பங்களால் இவ்வாறு துயருடனேயே உயிரிழந்து போகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரான்ஸ்சிஸ் சவேரியார் தேவாயலத்தின் பங்குதந்தை. அருட்தந்தை மரியாம் பிள்ளை ஹான்ஸ்போவர் இரங்கல் உரையாற்றியுள்ளார்.

தமது தாயாரை இழந்து நிற்கும் பிள்ளைகள் கண்ணீருடன் தெரிவிக்கையில் எங்கள் குடும்பத்தை பராமரித்து வந்த எமது சகோதரர் கடந்த 2009ஆம் ஆண்டு காணாமல் போனதையடுத்து பல இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில் உணவு, உறக்கம் இன்றி அழுதபடி திரிந்த எங்கள் அம்மாவும் எம்மை விட்டு போய் விட்டதாக கண்ணீர் விட்டழுதனர். (செ-15)

## 6 பேர் நாடு கடத்தல்...

விமான நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உதவி கட்டுப்பாட்டாளர் எம்.ஜீ.வீ. காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை வந்தடைந்துள்ள சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை மேலதிக விசாரணைகளுக்கு குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடுகடத்தப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களுடன், பாதுகாப்பு பிரிவினர் மற்றும் மொழிப்பெயர்ப்பாளர்கள் உள்ளிட்ட 20 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாளர்களுக்கும் தலா ஒரு பாதுகாப்பு உத்தியோகஸ்தர் வீதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(செ-11)

## மதுபானசாலை...

விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக அம்பலப்படுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்னர் பௌத்த மக்களின் பெருந்தலைவர்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகாநாயக்கர்களை சந்திப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் நேற்று கண்டிக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எத்தனோல் போன்ற போதைப்பொருள் உற்பத்திகளால் எழுந்த பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைந்து முற்றுப்புள்ளி வைத்ததைப் போன்று இந்தப் பிரச்சினைக்கும் விரைவில் தீர்வொன்று கிடைக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டிலுள்ள பிரபல மதுபான உற்பத்தி நிறுவனம் தனது கிளை ஒன்றை மட்டக்களப்பு கல்குடா பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவது தொடர்பில் பல தரப்பட்ட வகையில் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது.

குறித்த மதுபானசாலை நிறுவனம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடத்திற்கு மதுபான உற்பத்தி நிலையம் தொடர்பாக அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் இருவர்கூட அண்மையில் தாக்கப்பட்டிருந்தனர்.

தற்பொழுது இரு ஊடகவியலாளர்களுக்கான விசாரணைகூட வாழைச்சேனை நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், மதுபான உற்பத்தித் தொழிற்சாலையை உடன் நிறுத்த வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சீ. யோகேஸ்வரன், எஸ்.வியாழேந்திரன் கடும் எதிர்ப்பை மக்களோடு மக்களாக நின்று வெளியிட்டு வருகின்றனர்.

கல்குடா மதுபான உற்பத்தித் தொழிற்சாலைக்கு முன்வைக்கப்பட்ட அனுமதிக்கான கோரிக்கைக்கு எவ்வாறு அனுமதி பெறப்பட்டதென தற்போது விசாரணை இடம்பெறுகின்றது அதனூடாக உண்மையை தெரிந்து கொள்ள முடியும்.

நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு பயோபூல் முறைக்கு மாற்றுவது தொடர்பாகவும் தெரியமுடியும். எத்தனோல் என்ற சொல் ஊடகங்களே வெளியிட்டன. எத்தனோலை உற்பத்தி செய்ய எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை.

எனவே இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வுகண்டதுபோல இந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாணமுடியும். நாட்டை சிறந்த பாதையில் இட்டுச்செல்வதே எமக்கு உள்ள அவசியமாகும் என வெளிவிவகார அமைச்சர ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

## குப்பை வீசிய...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில், கொழும்பு நகரங்களில் பிரதான இடங்களில் குப்பை வீசிய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த 454 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் வாகனங்களில் வந்து குப்பைகளை வீசியதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## அதிக குப்பை...

காரணம் என்று சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த பிரச்சினையை விரைவாக சமாளிக்கத் தவறினால் சூழ்நிலை மேலும் மோசமாகும் என்றும் அவர் எச்சரித்தார்.

கடந்த ஏப்ரலில் கொழும்பில் குப்பை மேடு சரிந்ததில் 30க்கும் அதிகமானோர் உயிரிழந்ததை தொடர்ந்து, நகரில் குப்பைகளை அள்ளும் நடவடிக்கையில் தொய்வு ஏற்பட்டது.

தெருக்களில் தேங்கும் அழுகிப்போன குப்பைகள் அதிகரித்து வருவதால் கொசுக்களின் இனப்பெருக்கும் அதிகரித்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் டெங்கு காய்ச்சலால் 200இக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

- கட்டிட இடிபாடு
- சுண்ணாம்பு மக்கி
- செம்பாட்டு மண்

என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு - 075 515 9089

(9585)

## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

M.Suren (9579)

இலங்கையின் முதன்மை வெளியீடு....

## யாழ் நதி

தரம் 1 தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கிய 2ஆம் தவணைப் பரீட்சை வினாத் தாள்கள் விடைகளுடன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ் நதி இன் புலமை ஊக்கி

2017 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான எதிர்பார்க்கை வினா அணுகு முறைகளை உள்ளடக்கிய 8 வினாத்தாள்கள் விடைகளுடன்

மொத்தமாக பெற்றுக்கொள்பவர்களுக்கு விலைக் கழிவு வழங்கப்படும்

இலங்கையில் அனைத்து புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு :

0777417143, 0112341942

(9584)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

2018 ஜனவரி பரீட்சைக்கான

aat [Sri Lanka]

[AA1, AA2, AA3]

Qualification:- G.C.E. O/L 6 Passes

Medium - Tamil & English

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-8834)

UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## பதவிக்கான தேடல் Dynamic

எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி தேடல்கள் ஆரம்ப மாகிவிட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.

- O/L, A / L படித்தவர்கள் உடனே அழையுங்கள்.
- தங்குமிடம், உணவு இலவசம்.
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(9586)

தொடர்புகளுக்கு - 077 230 2795, 076 678 1042


## மனித...

அரச மருத்துவர்கள் போராட்டம் நடத்தியுள்ள நிலையிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு கடும் விமர்சனத்தை முன்வைத்தார்.

வரையறுக்கப்பட்ட Celogen Lanka நிறுவனத்தின் புதிய மருந்து உற்பத்தி நிலையம் ஜனாதிபதியினால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

கண்டி - பல்லேக்கலயில் நிர்மாணிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இந்த நிறுவனதத்தின் புதிய மருந்து உற்பத்தி நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்துகொண்டார்.

இதன்போது அந்த நிகழ்வில் உரையாற்றிய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன,

வாழ்க்கை என்பது இறுதித்தருணத்தில் மிகவும் புதுமை மிக்கதாகும். இதை புரிந்துகொள்ள முடியாதவர்கள் தான் இன்று மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியர்கள். மனிதாபிமானமும், மருத்துவ விஞ்ஞானமும் இடையே இப்படிப்பட்ட வித்தியாசமே காணப்படுகின்றது. இன்று இருக்கும் மருத்துவர்களிடையே மனிதர்கள் எத்தனை பேர் உள்ளனர்? பணத்தை மட்டுமே பார்க்கின்றனர். இவர்களிடையே சிறந்த மருத்துவர்களும் இருக்கின்றனர். மருத்துவபீட மாணவர்களை அதிகரிப்பதற்கு சப்ரகமுவ, மொரட்டுவ ஆகிய பல் கலைக்கழகங்களில் புதிதாக மருத்துவப் பீடங்களை ஆரம்பிக்கவுள்ளோம். ஆனால் தனியார்மயப்படுத்துகின்றோம் என விமர்சிக்கின்றனர் சுகாதாரத்திற்காக இவ்வளவு தொகையை ஒதுக்கிய அரசாங்கம் இதுவரையிலும் இருந்ததில்லை. நானும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக கடமையாற்றியிருந்தவன். ஆனால் இன்று போல் அமைச்சை உடைத்துக் கொண்டு உள்ளே செல்லும் மாணவர்களாக இருக்கவில்லை. அதிகளவு செலவு செய்கையில் இலவசக்கல்வி குறித்து எங்களுக்கே பாடம் கற்பிக்க வருகின்றனர். மனிதர்களின் உயிரை காசு பணத்தில் மதிப்பீடு செய்ய ஒருபோதும் முடியாதென்பதை மருத்துவர்கள் உணர வேண்டுமென அமைச்சர் ராஜித குறிப்பிட்டார். (செ-11)

## அரசாங்...

பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

உதய கம்பன்பில மேலும் கூறுகையில்,

தேசிய தொழிற்துறைக்கு நிதி பங்களிப்பை வழங்கிய நெவில் பெர்னாண்டோவுக்கு சொந்தமான நிறுவனத்தை பங்கு சந்தைக்கு கொண்டு செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் எதிர்காலத்தில் அந்த நிறுவனத்தின் உரிமையானது போதைப் பொருள் வியாபாரியிடமோ அல்லது மதுபானசாலை உரிமையாளரிடமோ செல்லக் கூடும்.

அரசமருத்துவஅதிகாரிகள் சங்கத்தினர் வளைந்து கொடுக்கும் வகையில் தமது புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் ஜனாதிபதியின்மூலம் உறுதிமொழியை பெற்று மருத்துவர்கள் போராட்டத்தை கைவிட்டதாக கூறிய சுகாதர அமைச்சர், மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் அழுத்தங்களை கொடுத்துள்ளார்.

உலகில் முன்னேற்றம் அடையாத நாடுகளே தமது நாடுகளில் தனியார் பல்கலைக்கழகங்களை முன்னெடுத்துச்செல்வதாக குறிப்பிட்ட உதய கம்மன்பில இந்த அரசாங்கத்தின் அநீதியான ஆட்சிக்குரிய முடிவை தீர்மானிக்கும் விடயங்களில் சைட்டமும் ஒன்றென குறிப்பிட்டார். (செ-11)

## தொழுகையில்...

தாக்குதல் மேற்கொண்டமையால் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

முஸ்லிம்களின் நோன்பு பெருநாள் நேற்று நாடு பூராகவும் அனுஷ்டிக்கப்பட்டிருந்த நிலையில் வவுனியா, சூடுவெந்த புலவு பகுதியில் வயல் திடலில் முஸ்லிம்கள் சிலர் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர்.

அவ் இடத்திற்கு வந்த பிறிதொரு முஸ்லிம் குழுவினர் அவ்வாறு வழிபடுவது தவறு எனவும் அவ் வழிபாட்டை நிறுத்துமாறு கோரியும் தர்க்கத்தில் ஈடுபட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இரும்பு கம்பிகள் மற்றும் தடிகள் கொண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் வயல் திடல் தொழுகையில் ஈடுபட்ட ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா, உலுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## விளக்கு ஏற்றி...

தாங்கள் ஏற்படுவதாக தெரிவித்துள்ள தேசிய ஒருங் கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவரான பெங்கமுவே நாலக்க தேரர்,

இவ்வாறான இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கக் கோரி நாடளாவிய ரீதியில் விளக்கு ஏற்றி சத்தியாக் கிரகம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றையதினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பெங்கமுவே நாலக்க தேரர், ஆட்சியாளர்கள் துஷ்டர்களாக மாறுவதனாலேயே இயற்கை சினமடைந்து சேதங்களை ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாலக தேரர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நாட்டிற்கு எவ்வளவு அனர்த்தங்கள் ஏற்பட்டன என்பது குறித்து நாம் எல்லோரும் அறிவோம். ஒருபுறம் வெள்ளம், மறுபுறம் குப்பை மேட்டுச்சரிவும், மண்சரிவுகளும் ஏற்பட்டு இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்றன. இவை வெறுமனே ஏற்படாது. ஆட்சியாளர்கள் துஷ்டர்களாகும்போது இயற்கை சினமடைந்து அனர்த் தங்களை ஏற்படுத்தும் என்று புத்தபெருமானின் போதனை கூறுகின்றது.

இதுதான் இன்று நடக்கிறது. அதனால் குரோதம் மற்றும் வெறுப்பு ரீதியான அரசியல் நடத்தைகள் அகன்றுபோக வேண்டும் என்று கோரி சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தவுள்ளோம்.

இயற்கை அனர்த்தத்தைப் போன்று மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தமும் மிகவும் பயங்கரமானது. எனவே இவைபோன்ற பயங்கரங்களும் அகன்று போக வேண்டும் என்று கோரி சத்தியாக்கிரகம் செய்யவுள்ளோம்.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு சாத்தியமானதினால் தான் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இந்த சத்தியாக்கிரகம் 90 வீதமல்ல, நூற்றுக்கு நூறு வீதமும் சாத்தியமாகும். கொழும்பு கோட்டை சம்புத்தாலோக்க விகாரையில் நாளை மாலை 5.28 மணியளவில் இந்த சத்தியாக்கிரகம் நடத்தப்படவுள்ளதென அவர் தெரிவித்தார். (செ-11)


KPMG



## Vacancies for TraineeAssociates –Jaffna branch

**KPMG is a global network of professional firmsproviding Audit, Tax and Advisory services. We operate in 156 countries andhave174, 000people working in member firms around the world. The independent member firms of the KPMG network are affiliated with KPMG International Cooperative ("KPMG International") a Swiss entity.**

The local member firm in Sri Lanka was established in 1897 and presently is one of the largest professional service firms. The firmis also an ACCA approved platinum category employer for traineeand professional development.

***The ideal candidate should be:***

- Registered students of CA Sri Lanka, ACCA or CIMA;
- Students with excellent written and spoken English and aCredit for English Language and Mathematics at G.C.E O/L's;
- Able to demonstrate leadership and networking skills;
- Below 25 years of age as at 10th July 2017.

**Special consideration will be given for participation in sportsand extracurricular activities.**

Those who meet the specified criteria should send application letter with CV and e-mail to: mmayuran@kpmg.com on or before 10th July 2017.

APPROVED EMPLOYER ACCA PLATINUM

(9578)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.